நகர சபை, யாழ்ப்பாணம்

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

SPICE TRAVELS & TOURS (PVT) LTD® IATA



(C/421)

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 14 | சனிக்கிழமை (26.02.2011) | பக்கங்கள் 12 | ஓசை – 149

## யாழ்.நகர அபிவிருத்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(யாழ்ப்பாணம்)

நாடுமுழுவதிலும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நகர மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், யாழ். மாநகரத்திலும் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ளும் முகமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

நேற்றையதினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த நிலையில் யாழ்.மாநகரின் அபிவிருத்தி குறித்து அவருடன் கலந்துரையாடிதன் தொடர்ச்சியாகவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். நேற்று மாலை யாழ்.நகரில் உடனடியாக அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய இடங்களான யாழ்.பஸ் நிலையப் பகுதிக்கும், ஸ்ரான்லி வீதிக்கும் இடையிலான குளம் அமைந்துள்ள பகுதி மற்றும் யாழ்.குருநகர் கரையோரப் பகுதி என்பவற்றை சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நேரடியாகச் சென்று பார்வையிட்டார். இச்சமயம் யாழ்.பிரதேச செயலாளர் திருமதி எஸ்.தெய்வேந்திரம், நல்லூர் பிரதேச செயலாளர் செந்தில்நந்தனன், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, பிரதிமுதல்வர் துரைராஜா இளங்கோ (றீகன்), சட்டத்தரணி தேவராஜா ரங்கன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடபிராந்திய உதவிப் பணிப்பாளர் ராஜநாயகம், வடபிராந்திய நில அளவையியல் உதவி நாயகம் ஈஸ்வரமூர்த்தி, யாழ்.மாநகர சபை உறுப்பினர்களான கிறேசியன் (11ஆம் பக்கம் பார்க்க)

# படைத்தளபதிகளுடன் அமெரிக்காவின் நட்புறவு

(கொழும்பு)


**இலங்கையின் முப்படையி னதும் உயர்மட்டத் தளபதிகளு டனும் பல்நோக்கு அடிப்படையில் மிகவும் ஐக்கியமான உறவுகளைப் பேணுவதற்கு அமெரிக்க அரசு முயற்சித்து வருகிறது. புலிகளுடனான யுத்தம் தீவிரமாக இடம்பெற்ற காலத்தில் சேவையில் இருந்த உயர்மட்ட படை அதிகாரிகள் பலர் தற்போது ஓய்வு பெறும் நிலையில் உள்ளனர். மேலும் சிலர் ஏற்கனவே ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டனர். அல்லது கடல் கடந்த சேவைகளில் நியமனம் பெற்றுச் சென்றுவிட்டனர்.** **(11ஆம் பக்கம் பார்க்க)**



யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் திறப்பு விழாவில் ஆலாத்தி எடுத்து வரவேற்கும்போது...

## ஆசியாவின் பொருளாதாரம் என்றும் வலுவாக உள்ளது

### ஜனாதிபதி மகிந்த பெருமிதம்




(கொழும்பு)

மேற்குலக நாடுகளை விடவும் ஆசிய பொருளாதாரங்கள் வலுவானவை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு அபிவிருத்தி அடைந்த நாடுகளின் வங்கி மற்றும் பொருளாதாரக் கொள்கைகளே காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.அபிவிருத்தி அடைந்த நாடுகள் பொறுப்புணர்ச்சியற்ற வகையில் செயற்பட்டதனால் உலகப் பொருளாதாரமே (11ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பொதுநூலகத்தை எரித்தவர்கள் தமிழரின் உரிமை பற்றிப் பேசமுடியுமா?

### அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஆவேசம்



(கொழும்பு)

ஜூலைக் கலவரத்தை ஏற்படுத்தி, அதற்கு அரசாங்க அனுசரணை வழங்கி, தமிழ் மக்களுக்கு பெரும் அழிவுகளை ஏற்படுத்தியவர்கள் இன்று மக்களின் சுதந்திரம், மனித உரிமை குறித்துப் பேசுகின்றனர். ஆசியாவின் மிகச்சிறந்த நூலகமாக விளங்கிய யாழ். நூலகத்தை தீக்கிரையாக்கியவர்கள் யாழ். மக்களின் கலாசாரம் குறித்துப் பேசுகின்றனர் என இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி (11ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் பொறியியல் பீடம்; விரைவில் ஆரம்பிக்க ஜனாதிபதி ஏற்பாடு

### பசில் ராஜபக்ஷ தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடமொன்றை உருவாக்குவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொருளாதார அபி விருத்தித்துறை அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் முற்பகல் 11.00 மணியளவில் யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியின் மாடிக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நவீன தொழில்நுட்ப உபகர ணங்களைக் கொண்டமைந்த கொரிய அரசின் உதவியுடனான (11ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் புதிய தளபதி ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, புதிதாக கடற்படைத் தளபதியாகப் பதவியேற்ற வைஸ் அட்மிரல் சோமதிலக திஸநாயக்க நேற்று முன்தினம் பதவியேற்ற பின்னர் முதன் முறையாக சந்தித்துள்ளார்.

அலரி மாளிகையில் இடம் பெற்ற இச் சந்திப்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்து கொண்டுள்ளார்.

தேச நிர்மாணம் மற்றும் போரின் போது கடற்படையினர் ஆற்றிய பங்கு தொடர்பில் இச் சந்திப்பின் போது இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மகிழ்ச்சி தெரிவித்தார். அத்துடன், இச் சந்திப்பின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இலங்கையின் கடற்படைத தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திஸநாயக்க விசேட நினைவுப் பரிசு ஒன்றையும் வழங்கியுள்ளார்.

## வட.கிழக்கு நீதிமன்றங்களுக்கு தமிழ்பேசும் பொலிஸார்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களில் சேவையாற்றுகின் றமைக்காக மேலும் ஒரு தொகுதி இளைஞர், யுவதிகள் பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். இதற்கான உடன் நடவடிக்கைகள் எடுக்கப்படும் (11ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - கூட்டமைப்பு மீண்டும் சந்திப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் கூட்டமைப்புக்கு மிடையிலான மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (11ஆம் பக்கம் பார்க்க)

# பனை அபிவிருத்திச் சபைக்கு ஐந்து உழவு இயந்திரங்கள்



(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் எதிர்கால செயற்திட்டங்களை முன்னெடுக்கும் முகமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ 5 உழவு இயந்திரங்களை நேற்று வழங்கியுள்ளார்.

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை முன்பாக இந்த உழவு இயந்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

உழவு இயந்திரங்களை பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் லோகநாதனிடம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி கையளித்தார்.

இதன் மூலம் பனை அபிவிருத்திச் சபையின் எதிர்கால செயற்திட்டங்களை மேலும் விருத்தி செய்வதற்கு ஏதுவாக இருக்குமென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, பசில் ராஜபக்ஷ, டலஸ் அழகப்பெரும ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். மாவட்ட அரச அதிபர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் ஆரம்பக்கல்வி பாட கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி வலிகாமம் வலயத்திற்குட்பட்ட குறைந்தது 3 வருடகாலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடைய, இலங்கை ஆசிரியர் சேவை I அல்லது இலங்கை ஆசிரியர் சேவை 2 - I ஐச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

இதேவேளை, இலங்கை ஆசிரியர் சேவை I இலுள்ள மற்றும் 2 - I உடன் சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் ஆகியோரிடமிருந்து பொருத்தமானவர்கள் தெரிவுசெய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை ஆசிரியர் சேவை 2 - I இலுள்ள ஆசிரியர்களிடமிருந்து தெரிவு மேற்கொள்ளப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளா.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுய விபரங்கள் அடங்கிய படிவங்களை இரு பிரதிகளில் பூர்த்தி செய்து, அடுத்தமாதம் 4 ஆம் திகதிக்கு முன் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (26)

## கைத்தொலைபேசியில் ஆபாசப்படங்கள் வைத்திருந்த யாழ். இளைஞனுக்கு சிறை

(யாழ்ப்பாணம்)

ஆபாசப்படங்களை கையடக்கத் தொலைபேசியில் சேகரித்து வைத்திருந்த இளைஞர் ஒருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தினால் நான்கு மாத சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பளைப் பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு அவருடைய கையடக்கத் தொலைபேசியும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அதன்போது குறிப்பிட்ட இளைஞரின் கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப்படங்கள் சேகரிக்கப்பட்டு வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் அவரை ஆஜர் செய்ததைத் தொடர்ந்து இடம்பெற்ற விசாரணையின்போது நீதிமன்றினால் இளைஞர் குற்றவாளியாகக் காணப்பட்டார். இதனையடுத்து அவருக்கு நான்கு மாத சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

## ‘காந்தீயம்’ வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அதிகாரபூர்வ ஏடான ‘காந்தீயம்’ இதழின் ஜனவரி - பெப்ரவரி இதழ் வெளிவந்துள்ளது.

இவ்இதழின் இலவசப் பிரதியொன்றை தபால் மூலம் பெற விரும்புவோர் 5 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர், காந்தீயம், இல. 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ள முடியுமென்று இதழாசிரியர் ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார்.

## மின்வெட்டு தொடர்பான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு 27.02.2011 ஞாயிற்றுக்கிழமையன்று காலை 8 மணியிலிருந்து பி.ப 5 மணி வரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களிலும்,

01.03.2011 செவ்வாய்க்கிழமை மற்றும் 03.03.2011 வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பி.ப 5 மணி வரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும்,

பரமேஸ்வரா உப மின்நிலையத்தில் மின்மாற்றி மாற்றம் செய்யவேண்டி இருப்பதால் 02.03.2011 புதன்கிழமை பகல் வேளையில் 3 மணித்தியாலங்கள் பட்டணப்பகுதி நீங்கலான யாழ். மாநகரசபைப் பகுதிகளிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

## வடலியடைப்பில் டெங்கு; தடுப்பு நடவடிக்கை தீவிரம்

(யாழ்.நிருபர்)

வலி.தென்மேற்கு பிரதேசத்தின் வடலியடைப்பு கிராமத்தில் டெங்கு நோயாளர் இனங்காணப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் புகையூட்டி டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் உள்ள வீடுகளுக்குச் செல்லும் சண்டிலிப்பாய் பிரதேச சுகாதாரப் பிரிவினர் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக்கூடிய இடங்களை இனங்கண்டு அழிப்பதில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது.

டெங்கு நோய் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்திட்டங்களையும் இவர்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். (10)

## மெய்வல்லுநர் போட்டி

(சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ப.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (11)

## புதிய நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் கோவில் நிர்வாகசபை பொதுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

பரிபாலன சபையின் தலைவராக கலக்விசுவநாதனும், செயலாளராக ந.புஸ்பகுமாரும், பொருளாளராக சி.ஸ்ரீஜீவா ஆகியோரும், தொண்டர் சபையின் தலைவராக சி.கௌரிதரனும், செயலாளராக சி.ரிசிகேசனும், பொருளாளராக சி.விஜயராகவன் ஆகியோரும், பரிபாலன சபைக்கு 18 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும், தொண்டர் நிர்வாகத்திற்கு 12 பேர் கொண்ட நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது.

## உமையாள்புர மக்களுக்கான குடிநீர்சேவை வழமைக்குத் திரும்பியது

தட்டுவன்கொட்டி உமையாள்புரம் பிரதேச மக்களுக்கான குடிநீர் விநியோகம் வழமைக்குத் திரும்பியது.

கடந்த இரண்டு நாட்களாக இப்பிரதேச மக்களுக்கான குடிநீர் தடைப்பட்டிருந்தது. இது குறித்து அப்பிரதேச மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து அவர்களது குடிநீர் பிரச்சினையை சந்திரகுமார் எம்.பி தீர்த்து வைத்துள்ளார்.

கரைச்சி பிரதேச சபை நீர் வழங்கல் திணைக்களத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு பவுசர் மூலம் அப்பிரதேச மக்களுக்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது.

நீர்த்தாங்கியில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக தட்டுவன்கொட்டி உமையாள்புர மக்கள் கிளிநொச்சி பிராந்திய நீர் விநியோக வடிகால் அமைப்பு சபைக்கு பலமுறை முறையிட்டும் அவர்களுக்குரிய நீர் வழங்கல் சேவை சீரான நிலைக்குக் கொண்டுவரப்படவில்லை.

இதனால் அப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரது கவனத்திற்குக் கொண்டுவந்து இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினரின் துரித நடவடிக்கை காரணமாக அப்பிரதேச மக்களுக்கு சீரான நீர் விநியோகம் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (29)

## விடுதி நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியின் விடுதி நூற்றாண்டு விழா நாளை காலை 10 மணிக்கு அதிபர் வீ.கணேசராசா தலைமையில் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக ஏ.எப்.மரியதாஸ் (முன்னாள் தலைவர், பழைய மாணவர் சங்கம், ஐக்கிய இராச்சியம்), எஸ்.சந்தியாப்பிள்ளை (முன்னாள் தலைவர், பழைய மாணவர் சங்கம், கனடா) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மீள்குடியேற்றம் குறித்து விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொல்லங்கலட்டி ஜே/225 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் அனைவருக்குமான விசேட கலந்துரையாடல் நாளை காலை 10.30 மணிக்கு சடப்பச்ச வைரவர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளதால் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


### சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தர வாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 0212228680, 0775925088 (R/017)


## கரப்பந்தாட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டி வரிசையில் இன்று காலை 8 மணிக்கு கைதடி - நாவற்குழி வளர்மதி விளையாட்டு மைதானத்தில் கரப்பந்தாட்டப் போட்டி ஆரம்பமாகவுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் பே.சக்திவேல் தெரிவித்தார். (11)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்தப் பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் முதலாவது ஆண்டு பொதுக்கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய நீதிபதி பா.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் இ.யோகேந்திரம், பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் செயலாளர் செ.கமலநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் செயலாளர் எஸ்.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (100)


### யாழ்ப்பாணம் - மாநகரசபை
### துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம்
### பகிரங்க ஏலம்

யாழ்ப்பாண பஸ்நிலையத்தின் சபைக் கடைகளுக்கு கிழக்குப் பக்கமாக உள்ள காணியில் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தினை 2011.03.01 ஆம் திகதியிலிருந்து 2011.12.31 ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் 2011.02.28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதி முன்றலில் நடைபெறவுள்ளது.

சபையின் ஆரம்ப கேள்வித் தொகை ரூபா 120,000.00 (வற் நீங்கலாக)

**திருமதி யோகேஸ்வரி பற்குணராசா**
**(மாநகர முதல்வர்)**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(C/482)

தவறான வழியில் செல்லாதீர்கள். நேர்மையான வழியில் செல்ல எண்ணுங்கள். அதுபற்றிய விபரங்களை மட்டுமே திரட்டுங்கள். இதுதான் வெற்றியினை அடைய எளிய வழி. - தோமஸ் ஃபர்ஸன் -

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## இரட்டை வேடம்

நிலையானதும், ஸ்திரத்தன்மையும் கொண்ட அரசியல்வாதிகளை இன்று காண்பது மிகவும் அருமையிலும் அருமை.

தேர்தல்காலங்களில் மக்களின் வாக்குகளைச் சூறையாடுவதற்காக நிறைவேற்றமுடியாத எவ்வளவோ வாக்குறுதிகளை அள்ளிக்கொட்டுவார்கள்.

ஆனால், அந்த வாக்குறுதிகள் தேர்தல் முடிந்த கையோடு அவர்களாலேயே காற்றில் பறக்கவிடப்படுவதைத்தினமும் மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

இலங்கை சுதந்திரம் அடைந்து அறுபத்துமூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும், தமிழ் மக்களின் உரிமைகள் எதுவும் இன்றுவரை வழங்கப்படவில்லை. கூக்குரலிடும் அரசியல் தலைவர்களும் எம் மத்தியில்தான் உலாவி வருகிறார்கள்.

அரசியல் சுதந்திரம் மற்றும் உரிமைவேண்டி குரலெழுப்புபவர்கள் தமிழ்மக்களுக்கு ஒரு முகத்தையும், அரசுக்கு மற்றொரு முகத்தையும் காட்டி அரசியல் பிழைப்பு நடத்திவருபவர்கள்மீது மக்கள் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.

அரசாங்கத்தையும், அரசையும் ஆதரித்து மக்கள் நலத்திட்டங்களை மற்றும் அபிவிருத்தி வேலைகளைச்செய்த வண்ணம் மக்களோடு, மக்களாக இருந்து சேவைசெய்பவர்களையும் தூற்றிக்கொண்டு, அரசாங்கம் மேற்கொண்டு வரும் அபிவிருத்தித்திட்ட நிகழ்ச்சிகளில் மட்டும் பங்குபற்றி சந்தோஷப்படுபவர்களின் இரட்டை வேடத்தை என்னவென்று சொல்வது?

நாடாளுமன்றத்தில் ஒன்றும், நாடாளுமன்றத்துக்குவெளியே அப்பாவிப் பொதுமக்கள் மத்தியில் இன்னொன்றும், அமைச்சர்கள் கலந்துகொள்ளும் விழாக்களில் விருந்தாளிகளாகக் கலந்துகொண்டு மற்றொன்றையும் பேசி ஏமாற்று நாடகங்களை அரங்கேற்றுவதில் கைதேர்ந்தவர்கள் இத் தேசியவாதிகள். இவர்கள் விடயத்தில் தமிழ் மக்கள் எப்பொழுதும் விழிப்பாக இருக்கவேண்டிய காலகட்டமிது.

போராட்டகாலங்களிலும் சரி அதற்கு முற்பட்ட, பிற்பட்ட காலங்களிலும் சரி மக்களைப் பல்வேறு வடிவங்களிலான வதைகளுக்குள் உட்படுத்திய இவர்களை மக்கள் உயிருள்ளவரை மறக்கமாட்டார்கள்.

சொல்வதைச் செய்யமாட்டார்கள், செய்வதைச் சொல்ல மாட்டார்கள். தமக்கு எது சாதகமாகப் படுகிறதோ அதனைச்செய்வதற்குத் தயங்கமாட்டார்கள்.

கிராமங்களையும், நகரங்களையும் அபிவிருத்தி செய்வதற்கான உள்ளூராட்சி சபைத்தேர்தல் வெற்றியை சர்வதேசத்துக்குக்காட்ட எங்களுக்கு வாக்களியுங்கள் என்று பழைய பல்லவியைப் பாடிவரும் இவர்கள் விடயத்தில் மக்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

"பலரைச் சில காலமும், சிலரைப்பலகாலமும் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்றமுடியாது" என்பதை உணர்ந்திருப்பார்களோ தெரியாது.

ஆனால், இரட்டைவேடம் போடும் இவர்களின் செயற்பாடுகளைப் பார்க்கும் போது "நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறனின்றி வஞ்சனை சொல்வாராடி கிளியே. இவர் வாய்ச்சொல்லில் வீரரடி" என்ற பாரதியாரின் பாடல் வரிகள்தான் நினைவுக்குவருகிறது.

-ஆசிரியர்-

# சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீஸ்வரம், கீரிமலை நகுலேஸ்வரத்திற்கும் விடேச பஸ் வேவை!

### பிரதான பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ள மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு பக்தர்களின் நன்மை கருதி திருக்கேதீஸ்வரஆலயத்திற்கும், கீரிமலை, நகுலேஸ்வரர் ஆலயத்திற்கும் விசேட பேருந்துச் சேவைகள நடத்தப்படவுள்ளதாக கோண்டாவிலிலுள்ள பிரதான பிராந்திய முகாமையாளா எஸ். கணேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில்:

கடந்த வருடங்களிலும் பார்க்க பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் இவ்வாலயங்களில் சிவராத்திரி விரத அனுஷ்டிப்புக்காக செல்வாகள் என்ற எதிர்பார்ப்புடன் அதிகளவு பேருந்துகளைச் சேவையில் ஈடுபடுத்த போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

திருக்கேதீஸ்வரர் ஆலயத்திற்கு, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், காரைநகர் சாலைகளில் இருந்து 2 ஆம திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை பக்தர்கள் கூடும் எண்ணிக்கைக் கேற்ப பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இப் பேருந்து வண்டிகள் யாவும் ஏ-9 வீதியூடாக வவுனியா சென்று பின் அங்கிருந்து திருக்கேதீஸ்வரம் செல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை அண்மையில் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டுள்ளபோதும் கடந்த வருட இறுதிப்பகுதியிலும் இவ் வருட ஆரம்பத்திலும் பெய்த பெரு மழைப் பொழிவு காரணமாக பூநகரிப் பாதை போக்கு வரத்துக்கு உகந்ததாக இருப்பதாலும் குளங்கள் எல்லாம் உடைப்பெடுத்து வீதிகளைச் சேதமாக்கி சேறும் சகதியுமாக ஆக்கியிருபபதால் பக்தர்களின் நன்மை கருதி வவுனியா ஊடாகவே பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இதேவேளை கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பவர்களின் நன்மை கருதி, யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் 24 மணிநேரமும் பேருந்து வண்டிகள் சேவையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

பக்தர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே பேருந்து வண்டிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆங்கில தினப்போட்டிக்கு விவாதமும், கதை சொல்வதும் சேர்ப்பு

(பருத்தித்துறை)

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்படும் ஆங்கில தினப் போட்டிக்குரிய இரண்டாவது சுற்றுநிருபத்தில், விவாதமும் கதை சொல்லுவதும்சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரம்10 முதல் 13 வரையான மாணவர்களுக்கு விவாதமும், தரம் 6 முதல் 9 வரையான மாவணவர்களுக்கு கதை சொல்லுவதும் சேர்த்துககொள்ளபபட்டுள்ளது.

விவாதத்திற்கான தலைப்புக்கள், பெண்விடுதலை, இலவசக்கல்வி, அழகியலும் விளையாட்டும், தலைமைதுவம், கிராமிய அபிவிருத்தி எதிர் நகர அபிவிருத்தி, இலத்திரனியலும் வெகுசன ஊடகமும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன் குலுக்கல் மூலம் இவற்றில் ஒன்று தெரிவு செய்யப்பட்டு போட்டி ஆரம்பமாவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் தலைப்பு அறிவிக்கப்படும் எனவும், கதை சொல்லுதலில் தரம் 6 முதல் 7 வரையான மாணவாகளுக்கு நாடோடிக்கதைகளும் பாரம்பரிய கதைகளும், தரம் 8 முதல் 9 வரையான மாணவர்களுக்கு கற்பனைக்கதைகளும் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (109)


## இலவச மருத்துவ முகாம்

(கரணவாய்)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாமும் மற்றும் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் 2 மணிவரை கெருடாவில் இ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் வடமராட்சி பிரதேச மக்கள் கலந்து கொண்டு பயன் பெறு மாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித் துள்ளனர். (18)

# பொன்சீன் இல்லம் முதலாம் இடம்



(யாழ்ப்பாணம்)

சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த புதன்கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் கல்லூரி அதிபர் வணபிதா எம்.ஜெரோ செல்வநாயகம் தலைமையில் ஆண்டகை தியோகுப் பிள்ளை மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் லண்டனில் வாழும் டாக்டர் குமார் பாலச் சந்திரா தம்பதிகள் பிர தம விருந்தினராகவும், வட மாகாணசபை கட்ட நிர்மாணத் திணைககளச் களச் செயலாளர் பொறியியளாளர் இரா ஜேந்திரா சிறப்பு விருந் தினராகவும் கலந்து கொண்டனர்.

இதில் 304.5 புள்ளிகளைப் பெற்ற பொன்சீன் இல்லம் முதலா மிடத்தையும், லோங், டன், மத்தியூஸ் ஆகிய இல்லங்கள் முறையே 2ஆம், 3ஆம், 4ஆம் இடங்களையும் பெற்றுக்கொண்டன. (20)

## வீதிப்புனரமைப்புக்கு கருங்கல்லை பயன்படுத்துமாறு அறிவுறுத்து

(அச்சுவேலி)

யாழ்.மாவட்டத்தின் பலபகுதி களிலும் நெல்சிப் திட்டத்தின் கீழ் திருத்தியமைக்கப்படவுள்ள வீதி களைச் செப்பனிடுவதற்காக கருங்கற் களையே பயன்படுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீதிகளைச் செப்பனிடுவதற் காக முன்னைய காலங்களில் குடாநாட்டுச் சுண்ணாம்புக்கற் களையே முழுமையாகப் பயன் படுத்தியிருந்த போதிலும் இக்கற் கள் உயர் அழுத்தத்திற்கு உட்படும் போது விரைவாக நொருங்கும் இயல் பைக் கொண்டிருப்பதால் வீதிகள் விரைவாகச் சேத மடைந்து விடுவதால் இனிவரும் காலங்களில் வீதிகளைப் புன ரமைப்பதற்கு கருங் கற்களையே பயன்படுத்தத் திட்ட மிடப்பட்டி ருப்பதாகவும் தெரிவிக்கும் அந்தத் தகவல் நெல்சிப் திட்டத தின் கீழ் செப்பனிடப் படவுள்ள வீதிகள் கருங்கற்கள் கொண்டே செப்பனிடப்படும் என்றும் தெரிவிக்கின்றன. (03)

# சைவசமய அறிவுப்போட்டி

(யாழ்.நிருபர்)

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் சைவசமய அறிவுப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.இந்துககல்லூரியில் நடைபெறும்.

தரம் 1,2 மாணவர்களுக்கான நீதிநூல் மனனப் போட்டிகள் அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்றும் பரீட்சைச் செயலாளர் சு.சிறீகாந்தன் அறிவிததுள்ளார். (10)

## சிறுகதைப் போட்டியில் முதல் இடம்



(கொக்குவில்)

குருநகரைச் சேர்ந்த செல்வி எலிஸ்ஏஞ்சல்ஸ் மரியாம்பிள்ளை தேசிய இளைஞர் மன்றம் நடாத்திய யாழ். மாவட்ட இளைஞர் விருது 2010 சிறுகதைப் போட்டியில் முதல பரிசைப் பெற்றுக்கொண்டார்.

இவர் 2009 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மேற்படி போட்டியில முதல் பரிசைத் தட்டிக் கொண்ட வரென்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் கல்வி பயின்ற இவர் இளநிலை ஆசிரியையாக வவுனியா, தேசியகல்வியியல் கல்லூரியில் பயிற்சி பெற்று தற்பொழுது ஆசிரியப்பணி புரிந்து வருகிறார். (68)

## ஊக்குவிப்பு நிதி

வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தில் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 12 பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு நிதி வழங்கப்படவுள்ளது.

இவர்களின் சுய தொழில்களை ஊக்குவிக்குமுகமாக முதற்கட்டமாக 7,500 ரூபா வீதம் வழங்குவதற்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி பயனாளிகள் கடந்த புதன்கிழமை பிரதேச செயலகத்தில் தமது கொடுப்பனவுப் பத்திரங்களில் ஒப்பமிட்டு சமர்ப்பித்துள்ளனர். (10)

# வாழ்வாதாரத்தை மேம்படுத்தவே கடன்கள் கடனாளிகளாக மாற்றுவதற்கு அல்ல

## மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் சுசீந்திரன்

(சண்டிலிப்பாய்)

வங்கிகளைப் பொறுத்தமட்டில் தாம் சார்ந்த பிரதேசங்களின் அபிவிருத்தியையும், அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவுமே கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதன் மூலம் ஒருவரை கடனாளியாக்குவது வங்கிகளின் நோக்கமல்ல என்று மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன் கூறினார்.

மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் வங்கிகளின் கடன் தொடர்பான விளக்கக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் தலைவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மானிப்பாய் அமைப்பாளருமான அன்ரன் ஜோன்சன் தலைமையில் நடை பெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடன் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் கடனைப் பெற்றுக்கொள்ளாமல் பெற்ற கடனைக் கொண்டு வருமானத்தை அதிகரிக்கச் செய்யக் கூடிய தொழில்களைச் செய்து வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும். மக்கள் வங்கிகளில் சேமிப்பில் வைப்பிடும் பணத்தையே வங்கிகள் கடனாக வழங்குகின்றனர். நிதி இல்லாத வங்கி என்று எந்தவொரு வங்கிகளும் இல்லை.

பணத்தை உற்பத்தித் தொழிலில் முதலீடுசெய்யும் முன், அவ்வுற்பத்திக்கான சந்தை வாய்ப்புகள் உண்டா என ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதன் மூலம் பெறப்படும் பணத்தினைக் கொண்டு கடனைக் கிரமமாகச் செலுத்தலாமா என்பதையும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

செய்யும் தொழிலின் வருமானத்தினால் நாங்கள் வாங்கிய கடனை மீளச் செலுத்தினால் மட்டும் போதும் என நினைக்கக்கூடாது. அந்த வருமானத்தில் ஒரு சிறுபகுதியாவது சேமிக்கப் பழக வேண்டும்.

மக்கள் வங்கி பல வகையான கடன் திட்டங்களை வழங்கி வருகிறது. வெங்காயச் செய்கை போன்வற்றிக்கு ஏக்கர் ஒன்றுக்கான கடன் தொகையை 90 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளோம். தற்போது கடன்களுக்கான அதிகபட்டச வட்டியாக 12 வீதம் அறவிடப்படுகிறது.

மக்கள் வங்கி இந்தப் பிராந்தியத்தில் கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் விவசாயம் மற்றும் கைத்தொழில் தேவைக்காக சுமார் 9.5 கோடி ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

பங்களாதேஷ் போன்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தி வெற்றி காணப்பட்ட குழு முறையிலான கடன் திட்டத்தை நாம் வழங்கிவருகிறோம். இது கிராம மட்டங்களில் உள்ளவர்களுக்குப் பெரிதும் உதவும் திட்டமாகும் என்றார்.

இந்நிகழ்வில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை உதவிப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன், மக்கள் வங்கியின் கடன் வழங்கல்கள் அதிகாரி சி.கோபி கிருஷ்ணா, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமப் பிரதேச சபை அமைப்பாளர் ஜீவன், வலி.தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி புஸ்பமலர் சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (54)

## மின்தடை

(யாழ்ப்பாணம்)

மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று சனிக்கிழமையன்று காலை 9 மணியிலிருந்து மதியம் 12 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை புத்தூர், வாதரவத்தை, வீரவாணி, ஆவரங்கால், ஊறணி மற்றும் நெலலண்டை, தும்பளை, கற்கோவளம், புனிதநகர், உபய கதிர்காமம், வல்லிபுரம், வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## புனரமைக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பழையபூங்கா கடற்கரை வீதி தற்போது அகலமாக்கப்பட்டுத் தார் இடப்பட்டு செப்பனிடப்படுகிறது.

கடந்த காலங்களில் இராணுவக் கட்டுப்பாடுக்குள் இருந்த இவ் வீதி தற்போது பொதுமக்களின் பயன்பாட்டுக்காக விடப்பட்டதையடுத்து இவ்வீதியால் தினமும் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், மீனவர்கள், பொதுமக்கள் எனப் பலர் பிரயாணம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டடத் திணைக்களம், யாழ். மீன்பிடி வலை உருவாக்கம், யாழ்.உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர். அலுவலகம் என்பன இவ்வீதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ஏ.அகிலதாஸ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் கல்லூரி பழைய மாணவர்களான சமூகப் புரவலர் மாணிக்கம் சுப்பிரமணியம் பிரதம விருந்தினராகவும், பொறியியலாளர் எஸ். கிருபானந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## 21 தொண்டர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளையினர் தொண்டர் அடிப்படையில் யாழ்போதனா வைததியசாலையில் சேவையாற்ற 21 தொண்டர்களை வழங்கியுள்ளனர்.

இதில் 19 பெண்களும், இரு ஆண்களும் அடங்குகின்றனர். மேலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் தொண்டர்களாகப் பணியாற்ற விரும்பும் ஆண்கள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.பணிமனையினருடன் தொடர்புகொண்டு இணைந்து கொள்ளலாம் என செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

## பிரிவுபசார, வரவேற்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் நடத்தும் பிரிவுபசார வைபவமும் வரவேற்று விழாவும் இனறு முற்பகல் 10 மணிக்கு யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத்தலைவர் நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் பிரதம விருந்தினராகவும், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி என்.ஏ.ஜெயராஜன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# வடமராட்சி கிழக்கிலுள்ள 150 குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான உதவிகள்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியமர்ந்த 150 குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் வாழ்வாதார மேம்பாட்டுக்கான உதவிகளை வழங்கவுள்ளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் தலைமையில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிறுவர் பாதுகாப்பு நிதியப் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்ட கலந்துரையாலில், உடுத்துறை, மருதங்கேணி கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள ஏழு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கடற்றொழில், வீட்டுத் தோட்டம், ஆடு, மாடு வளர்ப்பு, சிறிய கடைகள் நடத்துதல் ஆகிய தொழில் முயற்சிகளை நடத்துவதற்கு தொழில் முயற்சிகளுக்கு ஏற்ப ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூபா 40,000 இற்கு மேற்படாமல் வழங்கப்படவிருக்கிறது.

பயனாளிகள் தெரிவின் போது குடும்பத்தில் சிறுவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவிருக்கிறது. (70)

## மண்டைக்கல்லாறு ஆலயத் திருவிழா

(பாஷையூர்)

21 வருடங்களின் பின்னர் மண்டைக்கல்லாறு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழாத் திருப்பலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் புனித மடுத்தீனார் குருமட அதிபர் அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் தலைமையில் பாஷையூர் பங்குத்தந்தை அருட்தந்தை றோய் பேடினன், அருட்தந்தை எட்மன் மைக்கல், அருட்தந்தை பிறைன் ஆகியோர் இணைந்து இத்திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுக்கவுள்ளனர்.

இதுவரை காலமும் பூநகரி பங்கைச்சேர்ந்த பூநகரி, பள்ளிக்குடா மக்களே இத்திருவிழாவை நடத்தி வந்தனர்.

75 குடும்பங்களே தங்கியிருந்து இவ்வழிபாடுகளில் ஈடுபட அனுமதி அளித்துள்ளதா கவும், மாலை 6 மணிக்கு முன் வழிபாடுகளை முடித்து கரைக்குத் திரும்பவேண்டும் என இராணுவத்தினர் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாலயத் திருவிழாவில் வன்னிப் பகுதியைச் சேர்ந்த கத்தோலிக்க மக்களும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (21)

## மாலை வேளையில் இயங்கும் மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை

ஆனைக்கோட்டையில் இயங்கி வரும் மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலை கடந்த ஒரு வாரகாலமாக மாலை வேளையில் மட்டுமே இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறித்த வைத்தியசாலை வைத்திய அதிகாரி விடுமுறை பெற்றுச் சென்றுள்ளதனால் பதில் வைத்தியராக உடுவில் அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரியே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

இதனால் பி.ப. 2மணிமுதல் 6 மணிவரையே நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட நேர இடைவெளிக்குள் அதிகளவில் நோயாளர்களை பார்வையிட முடியாது. இதனால் பல நோயாளர்கள் சிகிச்சையின்றி திரும்பிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்க்ள் காலை வேளையில் சிகிச்சைக்காக வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தமது நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (104)



உயரப்புலம் குணபால வித்தியாலயத்தில் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா 18.01.2011 இல் நடைபெற்றபோது, மாணவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டிருப்பதையும், அதிபர் என்.தனபாலசிங்கம் தலைமையில் சிறுவர்களுக்கான பாடசாலையை அன்பளிப்புச் செய்த டாக்டர் என்.சிவபாலனின் சிறிய தாயார் திருமதி எஸ்.நாகராசாவுடன் தரம் 1 ஆசிரியரையும் காணலாம். (06)

# சிறுதானியப் பயிர்களை அழிக்கும் கட்டாக்காலி கால்நடைகள்

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

(யாழ்.நிருபர்)

காரைநகரில் பெரும்போக நெற்செய்கை இம்முறை அமோக விளைச்சல் கண்டுள்ளது. அறுவடை மும்முரமாக நடைபெற்று வருகிறது. அறுவடை நடைபெற்று முடிந்த கையோடு கட்டாக்காலி ஆடு, மாடுகள் வயல்களில் சுதந்திரமாக மேயத் தொடங்கியுள்ளன. இதனால் சிறுதானியப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாதுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வருடாந்த பெரும்போக அறுவடை நடைபெற்று முடிந்ததுடன் விவசாயிகள் எள்ளு, பயறு, உழுந்து போன்ற சிறுதானியப் பயிர்ச செய்கையில் ஈடுபடுவது வழக்கமாகும்.

இதேபோன்று இவ்வருடமும் நெல் அறுவடையை மேற்கொண்ட விவசாயிகள் சிறு தானியங்களை விதைத்துள்ளனர். கடந்த வருட இறுதியில் பெய்த கனமழையால் வயல்கள் ஈரலிப்பாக உள்ளமை சிறுதானியப் பயிர்ச் செய்கைக்கு உகந்ததாக இருப்பினும் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தையில் மேற்படி சிறுதானியங்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் கட்டாக்காலிக் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு கிராம அலுவலர்கள், காரைநகர் பிரதேச விவசாய சம்மேளனங்கள் மற்றும் பிரதேச சபையினர் போன்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பிரதேச விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10)

# எம்மை அறியாமலேயே பண்பாட்டு விழுமியங்கள் அழிக்கப்படுகின்றன

## ஐங்கரநேசன் கவலை

(அச்சுவேலி)

அருகிச் செல்லும் நம் பாரம்பரிய விளையாட்டுக்களான தாச்சி, கபடி, கிட்டிப்புல் போன்ற விளையாட்டுக்களை மீண்டும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி அவற்றைக் குழு ரீதியான விளையாட்டுப் போட்டிகளில் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குப் புத்துயிர் அளிக்கவேண்டும் என்று பொ.ஐங்கரநேசன் கேட்டுக்கொண்டார்.

அச்சுவேலி, சென். திரேசா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது -

இலங்கையின் தேசிய விளையாட்டாகிய எல்லேகூட இன்றுமாணவர் மத்தியில் பெரியளவில் பிரபல்யம் பெறவில்லை. மேலைத்தேச விளையாட்டுக்களாகிய கிரிக்கெட், கால்பந்து போன்ற விளையாட்டுக்களில் உள்ள ரசனை எமதுதேசிய பாரம்பரிய பண்பாட்டு விளையாட்டுகளில் இல்லாது போனது எமது பாரம்பரியத்தின் வீழ்ச்சியையே காட்டுகின்றது.

மாணவர்களை தேசத்தின் ஒட்டுமொத்த சமூக பொருளாதாரத்தைத் தாங்கி நிற்கின்ற ஆரோக்கியமானவர்களாக மாற்றுவது விளையாட்டுத்தான். விளையாட்டுகளும் எமது பாரம்பரியத்தின அடையாளச் சின்னம் தான். எமது அடையாளச் சின்னங்களை எவ்வளவு இழக்கிறோமோ அவ்வளவிற்கு எமது கலாசார விழுமியங்களும் சிதைக்கப்படுகின்றது.

ஆசிரியர்களுக்கு கட்டுப்பட்டு வழிநடத்தப்பட்ட மாணவர்கள் இன்று ஆசிரியர்களைத் தாக்குகின்ற பாதக நிலை ஏற்பட்டுள்ளது. பள்ளிப பருவத்திலே சிட்டுக்குருவிகள் போல் சிறகடித்துத் திரியவேண்டிய இளஞ்சிறார்கள் பலர் எங்கள் பிரபல பாடசாலைகள் பலவற்றில் கர்ப்பமடைந்து தாயாகி இருக்கின்றார்கள் என்பதைச் செய்திகளில் படித்திருப்பீர்கள். நாங்கள் எதையும் ஒளிக்க வேண்டிய அவசியத்தில் இல்லை. எம்மை அறியாமலேயே எமது பண்பாட்டு விழுமியங்கள் அழிக்கப்படுகின்றது.

இதனால் சமுதாயச் சீர்கேடுகள் பாரதூரமான அளவில் உருவெடுக்கின்றது. எனவே, இதனை நிவிர்த்தி செய்ய நாம் முயற்சிக்க வேண்டும்.

உடற்பயிற்சி என்பது உடலுக்கு மட்டுமல்லாது உள்ளத்திற்கும் நல்ல ஆரோக்கியமளிக்கின்றது. உடற்பயிற்சிகளின் மூலமும் விளையாட்டுக்களின் மூலமும் ஆளுமையும் தலைமைத்துவமும் மிக்க விழுமியச் சீர்கொண்ட இளைஞர்களையும் உருவாக்க முடியும். இதன்மூலம் எமது கலாசார விழுமியங்களையும் கட்டிக் காத்துக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (03)

# ஓவியப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம்

(அச்சுவேலி)

கடந்த ஆண்டு உலக ஈர நில தினத்தினைக் கொண்டாடும் முகமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை, ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சு என்பனவற்றால் நடாத்தப்பட்ட ஓவியப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களிலிருந்து மாகாண மட்த்திற்குத் தெரிவானவர்களின் விபரம் வருமாறு.

சிரேஷ்ட பிரிவில் முதலாம் இடத்தை செல்வன்.வின்சன் சந்திரதாஸ் (மானிப்பாய் இந்துக கல்லூரி), இரண்டாம் இடத்தை செல்வன் வோகன்ராஜ் டேமியன்ராஜ் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), மூன்றாம் இடத்தை செல்வன் நாகேந்திரன் கார்த்திக் (வைத்தீஸ்வராகக் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

கனிஷ்ட பிரிவில் முதலாம் இடத்தை செல்வன் றகுமத்துல்லா முகமட் (வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்) இரண்டாம் இடத்தை, செல்வி.ஜனுசா ஜெயராஜா (இந்து மகளிர் கல்லூரி) மூன்றாம் இடத்தை செல்வி பிரியந்தினி பாலசேகரம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

மகாண மட்டத்தில் வெற்றி பெற்ற இவர்களுக்கு முறையே 7500 ரூபா, 5000 ரூபா, 3000 ரூபா பரிசாக வழங்கப்பட்டது. (03)

## கியூடெக் நிறுவனத்தால் சிறுகதை, கவிதைப்போட்டி

(யாழ்ப்பாணம்)

மகளிர் தினத்தை முன்னிட்டு கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் சிறுகதை, கவிதைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

"உன்னை வலுப்படுத்து உலகம் வலுப்பெறும்" எனும் கருப்பொருளில் சிறுகதையை ஏ-4 தாளில் நான்கு பக்கங்களிற்கு மேற்படாமலும், புதுக்கவிதையாயினும், மரபுக் கவிதையாயினும் 16 வரிகளுக்கு மேற்படாமல் எழுதி அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன், சிறுகதை, கவிதைப் போட்டி ,இயக்குநர், கரித்தாஸ் - கியூடெக், யாழ்ப்பாணம், என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (21)

# மீண்டும் இயங்கும் கடிகாரம்

(கொக்குவில்)

யாழ். கோபுர மணிக்கூடுகள் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன. கடந்த சில மாதங்களாக இம் மணிக்கூடுகள் செயலற்றுக் கிடந்து வந்ததும் அறிந்ததே. காலத்துக்குக் காலம் இம் மணிக்கூடுகள் பழுதடைவதும், சில மாத இடைவெளியில் திரும்ப இயங்குவதும் பல வருடங்களாக நடந்து வருகின்ற காரியமாக உள்ளது.

முன்பிருந்த பழமை வாய்ந்த முறுக்கல் மணிக்கூடுகள் மாற்றப்பட்டு, நவீன எலக்ரோனிக் கடிகாரம் பொருத்தப்பட்ட பின்பாகவும் இவ்விதம் பல தடவைகள் பழுதடைவதும் சில மாத இடைவெளிகளில் திரும்ப இயங்க வைப்பதும் நடைபெற்று வருவது புதுமையில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். (68)

# கருத்திட்டங்கள் அறிமுகம்

(அச்சுவேலி)

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வருமான உருவாக்குகைக்கான சுற்றாடல் நட்புறவுக் கருத்திட்டத்தின் கீழ் தேனீ வளர்ப்பு மற்றும் பசுமை சுற்றாடல் நட்புறவான கருத்திட்டங்களை அறிமுகப்படுத்தும் திட்டத்தின் கீழ் நாற்றுமேடை அமைத்தல் போன்ற திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதில் தேனி வளர்ப்புத் திட்டம் யாழ். முத்துத்தம்பி மகா வித்தி யாலயம், யாழ். பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை, யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கும், நாற்றுமேடை அமைத்தல் செயற்றிட்டம் யாழ். இடைக்காடு மகா வித்தியாலயம், யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை ஆகிய வற்றிற்கும் வழங்கப்பட்டிருப்பதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை யின் வடமாகாண அலுவலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (03)

## ஆதினியின் இன்றைய பலன்

(26.02.2011 - சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி மாசி 14

இராகுகாலம் 9.29- 10.59, சுபநேரம் 3.29 -4.59, நவமி மு.இ.9.44, கேட்டை மாலை 6.41 சித்தம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:-** அமைதியில் நாட்டம், ஆலய தரிசனம், மனநிறைவு.

**ரிஷபம்:-** தொழிலால் நட்டம், பணமுடை, அவமானம்.

**மிதுனம் :-** அயலவர் உதவி, மேலாளர் நட்பு, ஆரோக்கிய மிகுதி.

**கடகம்:-** பாராட்டப்படல், தெய்வதரிசனம், உதவிகள் செய்தல்.

**சிம்மம்:-** போட்டிகளில் வெற்றி, நினைத்ததைச் சாதித்தல், மனநிறைவு.

**கன்னி :-** கற்பனை மிகுதி, கோபப்படல், வீண்வார்த்தை பேசல்.

**துலாம் :-** விபத்து, காரிய விக்கினம், அதிக செலவு.

**விருச்சிகம்:-** எதிலும் ஈடுபடல், தளராத முயற்சி, காரிய சித்தி.

**தனுசு:-** விருந்துணவு, கலகலப்பான பேச்சு, ஆரோக்கியம்.

**மகரம்:-** தேக ஆரோக்கியம், அதிக செலவு, மனதில் வெறுப்பு.

**கும்பம் :-** முயற்சி பலிதம், நண்பர்சேர்க்கை, நற்செய்தி.

**மீனம்:-** பாராட்டப்படல், முயற்சியில் ஆர்வம், அதிகலாபம்.

# பீடைநாசினிச் சட்டம் புதிய பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

பீடைநாசினிச் சட்டம் மற்றும் பீடைநாசினிகளைப் பாதுகாப்பாகக் கையாளுதல் தொடர்பான பயிற்சிநெறி ஒன்று பீடைகொல்லிப் பதிவாளர் அலுவலக உத்தியோகத்தர்களினால் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் 28 ஆம் திகதி திங்கட கிழமை காலை 9 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியின்போது பீடைநாசினிகளைக் கையாளுபவர்களுக்கும், விற்பனை செய்பவர்களுக்கும் எவ்வாறு பீடைநாசினிகளைப் பாதுகாப்பாகக் கையாளுதல், களஞ்சியப்படுத்தல், விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்தல், தங்களைப் பாதுகாத்தல் போன்ற விடயங்கள் தொடர்பான அறிவும் பயிற்சியும் வழங்கப்படும்.

அதேநேரம் பீடைகொல்லிப் பதிவாளர் அலுவலக உத்தியோகத்தரினால் பீடைநாசினிகளை விற்பனை செய்வதற்குரிய விற்பனையாளர் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சிநெறிக்கு மாவட்டத்தில் பீடைநாசினிகள் விற்பனையில் ஈடுபட்டு வரும் விற்பனையார்கள், கமநல சேவை நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பீடைநாசினிகள் சம்பந்தமான அறிவூட்டலில் ஈடுபடும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களும் இப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ளவுள்ளதாக யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## குப்பைத் தொட்டிகள் வழங்கல்

(சண்டிலிப்பாய்)

வலி. மேற்கு சுழிபுரம் பிரதேசசபை, சங்கானை நகரப் பகுதி வர்த்தகர்களின் பாவனைக்கு 20 குப்பைத் தொட்டிகளை வழங்கியுள்ளது.

இக் குப்பைத் தொட்டிகள் வழங்கப்படதின் மூலம் சங்கானை வர்த்தகர்கள் குப்பைகளைப் போடுவதில் எதிர்நோக்கி வந்த சிரமங்கள் ஓரளவுக்கு நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (54)

## அக்குபஞ்சர் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் சித்த மருத்துவப் பிரிவின் நல்லூர் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலையின் கொரியன் அக்குபஞ்சர் சிகிசசை செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாட்களில் நடைபெற்று வருவதாக மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார்.

விசேட யாழ். சித்த வைத்தியர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இச்சிகிச்சை மூலம் பல நோயாளிகள் பயனடைந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.






யாழ். கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள தேசிய வியாபார முகாமைத்துவ நிலையத்தின் திறப்புவிழா நிகழ்வில் பிரதம அதிதிகள் அழைத்துவரப்படுவதையும், இந்நிகழ்வில் கலந்துகொண்ட பசில் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உரையாடுவதையும், புதிதாக அமைந்த கட்டடத்தின் முன்தோற்றத்தையும் காணலாம்.

## 'பொன் அணிகளின் போர்' முதல் நாள் ஆட்டம்

# பிரசோபனன் நிதானம் கலந்த துடுப்பாட்டம் முதல் இனிங்சில் யாழ்ப்பாணக் கல்லூரி 194



பிரசோபனன்

(யாழ்ப்பாணம்)


'பொன் அணிகளின் போர்' என வர்ணிக்கப்படுகின்ற மாபெரும் கிரிக்கெட் தொடரின் முதல் நாள் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி, கே. பிரசோப னனின் நிதானம் கலந்த துடுப்பாட்டத்தின் உதவியுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த 'பொன் அணிகளின் போர்' மாபெரும் கிரிக்கெட் போட்டி நேற்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டி இரண்டு நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டியாகும்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்சிற்காக களமிறங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி, கே. பிரசோபனனின் நிதானம் கலந்த துடுப்பாட்டத்தின் உதவியுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றது. இந்த ஓட்டங்களை 91.2 ஓவர்களில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி பெற்றுக் கொண்டது. இதில் கே. பிரசோபனன் 206 பந்துகளை எதிர்கொண்டு பத்து பவுண்டரிகள் அடங்கலாக 79 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் அணித் தலைவர் ஆர். பெண்டில்கரன், எஸ். மதுசன் ஆகியோர் தலா 20, பி. அபிராஜ் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அணித் தலைவர் எரிக் பிரதாப் மிகச் சிறப்பாகப் பந்து வீசினார். 21.5 ஓவர் கள் பந்து வீசிய எரிக் பிரதாப் 37 ஓட் டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட் டுக்களைக் கைப்பற்றினார். மற்றும் ஜஸ்ரீன், நோபோட் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், முதல் இனிங்சிற்காக களமிறங்கிய யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி, நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, ஒரு விக்கெட்டை இழந்து ஏழு ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



எரிக் பிரதாப்

ஆடுகளத்தில் அஜித் டர்வின் மற்றும் ஜஸ்ரின் களத்திலிருந்தனர். இன்று போட்டியின் இறுதி நாளாகும். (எஸ்)




ஆரம்ப நிகழ்வில் விருந்தினர் மற்றும் பொறுப்பாசிரியர், பயிற்றுநர்களுடன் இரு அணி வீரர்களும். (படப்பிடிப்பு: சுரேஷ்)

# முரளிக்காக வெல்லவேண்டும்

(கொழும்பு)

இம்முறை இலங்கை அணி, சுழற்பந்துவீச்சாளர் முரளிதரனுக்காக உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும். ஏனெனில் இவர், இத்தொடருக்கு பின் ஓய்வை அறிவிக்கவுள்ளார். எனவே, இவரது கடைசித் தொடர் வெற்றிகரமாக அமைய வேண்டும். இலங்கை அணி கிண்ணத்தை வெல்லும் பட்சத்தில், டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் அதிக விக்கெட் வீழ்த்தி சாதனை படைத்துள்ள இவருக்கு, வழங்கப்படும் சிறந்த கௌரவமாக கருதுகிறேன் என சமர கபுகதேர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: உள்ளூர் ரசிகர்களின் ஆதரவு போட்டியில் சாதிக்க உதவுகிறது. எனவே ரசிகர்களுக்காகவும், இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும். கனடாவை வீழ்த்தி, உலகக் கிண்ணத் தொடரை வெற்றியுடன் தொடங்கியது மகிழ்ச்சி அளிக்கிறது. இன்றைய போட்டியில் பலமான பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ள உள்ளோம். பாகிஸ்தான் அணியில் துடுப்பாட்டம், பந்து வீச்சில் சிறந்த வீரர்கள் நிறைய இருப்பதால், இப்போட்டி சவால் நிறைந்ததாக இருக்கும். இப்போட்டியில் நிச்சயம் இரு அணியினருக்கும் நெருக்கடி இருக்கத்தான் செய்யும். இலங்கை அணியிலும் திறமையான துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் பந்து வீச்சாளர்கள் இருப்பதால், நெருக்கடிகளைக் கடந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிபெற முயற்சிப்போம் என்றார்.



## உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2011

# ஏற்புடையது அல்ல...

இலங்கையின் பல்லேகலவில் நடைபெறவிருந்த இலங்கை மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான உலகக் கிண்ணப் பயிற்சி ஆட்டம், கெத்தாராம பிறேமதாஸ மைதானத்திற்கு மாற்றப்பட்டமையினால் அதிருப்தி அடைந்து, சங்கக்கார தெரிவித்த கருத்துக் குறித்து சில விடயங்களை முன்வைக்கலாம் என எண்ணுகின்றேன்.

☐ பல்லேகல மைதானம் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு அதாவது பயிற்சி ஆட்டம் நடைபெறுவதற்கு முன்னதாக ஏற்கனவே தயார் செய்யப்பட்டுவிட்டது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு ஐ.சி.சி.யின் உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும் மைதானங்களைப் பார்வையிட்ட குழுவினர், கொல்கத்தாவில் இந்திய-இங்கிலாந்து அணிகள் பங்கு பற்றவிருந்த போட்டியினை மைதானப் பராமரிப்பு வேலை முடிவடையாததன் காரணமாகவே பெங்களூருக்கு மாற்றியிருந்தனர். பல்லேகல மைதானமும் போட்டிக்குத் தயார் செய்யப்படாத நிலை காணப்பட்டிருக்குமேயானால் இந்த ஐ.சி.சி. குழுவினர் பயிற்சிப் போட்டியையும் வேறு இடத்திற்கு மாற்றுமாறு கோரியிருப்பர். எனவே, அவ்வாறு கூறாததனால் மைதானத்தின் பராமரிப்பு வேலைகள் பூர்த்தி என்றே எண்ண வேண்டியுள்ளது. உண்மையில் பயிற்சிப் போட்டி இடம் மாறியதற்குக் காரணம் சீரற்ற கால நிலையே. இது இலங்கை கிரிக்கெட்டின் சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றாகவே காணப்பட்டது.

☐ ஆனாலும் இலங்கை கிரிக்கெட் நினைத்திருந்தால் பல்லேகலவில் நடைபெறவிருந்த பயிற்சி ஆட்டத்திற்குப் பதிலாக இலங்கை ஏ அணியினருடன் ஒரு பயிற்சி ஆட்டத்தினை ஒழுங்கு செய்து ஆடுகளத்தின் தன்மையினை அறிய முற்பட்டிருக்கலாம். அதற்கான காலமும் இலங்கை அணிக்கு இருந்தது. இலங்கை அணியின் முதற் சுற்று 5 போட்டிகள் இலங்கையிலேயே நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

☐ பொதுவாகவே ஒவ்வொரு தேசிய அணியும் சொந்த மைதானங்களின் ஆடுகளம் குறித்து ஆடுகள பராமரிப்பாளர்களின் கருத்துக்களை உள்வாங்கியே போட்டிகளில் கலந்து கொள்வர். இதற்கு பல்லேகல மைதானமும் விதிவிலக்கல்ல. எனவே சங்கக்கார ஆடுகள பராமரிப்பாளருடன் கலந்தாலோசித்து ஆடுகளத்தில் காணப்படும் வெடிப்புகள் மற்றும் புற்களின் அளவுகள் செறிந்து காணப்படுகின்றதா? குறைந்து காணப்படுகிறதா? என்பவற்றைக் கொண்டு இது துடுப்பாட்டத்திற்கு சாதகமானதா? இல்லை பந்து வீச்சிற்குச் சாதகமானதா? என்றொரு முடிவுக்கும் வந்திருக்கலாம்.

இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது இலங்கை கிரிக்கெட் தான் என்றாலும் குறைந்த பட்சம் இப்பிரச்சினை குறித்து ஒரு முன்மொழிவையாவது இலங்கை அணித் தலைவர் என்ற வகையில் சங்கக்கார இலங்கை கிரிக்கெட்டிடம் தெரிவித்திருப்பாரானால் அதனை வரவேற்றிருக்கலாம். ஆனால், சீரற்ற காலநிலை மற்றும் ஆடுகள பராமரிப்பாளருடனான கலந்துரையாடல் என எவற்றையுமே கருத்தில் எடுக்காமல் சங்கக்கார, இலங்கை கிரிக்கெட்டை குறைகூறுவது ஏற்புடைய ஒன்றாக அமையவில்லை. அத்தோடு, முரளிதரனின் பெயரால் நிறுவப்பட்டுள்ள இந்தப் பல்லேகல மைதானம் குறித்து ஆரம்பத்திலேயே இவ்வாறானதொரு சர்ச்சை வெளிவந்திருப்பது ஒரு வகையில் மனசுக்கு நெருடலாகவே உள்ளது.

**சி.விமலன,**
விளையாட்டுத் திணைக்களம்,
வடமாகாணம்.

**தினமொரு தகவல்**

ICC Cricket World Cup 2011


## 10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி - 2011

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு கிரிக்கெட் ஆர்வலர்களிடையே தினமொரு போட்டியை நடாத்தி தினமொரு பரிசில்களை வழங்க தினமுரசு எண்ணியுள்ளது

38 நாட்கள் மட்டுமே நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டிகள் தொடர்பாக தினமுரசில் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடைகளை தினமும் அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள் .

வெற்றியாளர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

38 வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் காத்திருக்கின்றன.

எனவே விடைகளை அனுப்புங்கள் பரிசில்களை அள்ளுங்கள்

தினமுரசில் வெளியாகும் கூப்பனில் மட்டும் விடைகளை எழுதி அனுபப்வேண்டும் ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்

**போட்டி இல.9**

அனுப்ப வேண்டிய முகவரி:-
**தினமுரசு**
விளையாட்டு அரங்கு,
இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ICC Cricket World Cup 2011

**தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.**

1) பெப்ரவரி 28 ஆம் திகதி நடைபெறவுள்ள மேற்கிந்தியத் தீவுகள், நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் வெற்றி பெறப்போகும் அணி எது?

2) இப்போட்டி எந்த மைதானத்தில் நடைபெறவுள்ளது?

பெயர்: ..............................

முகவரி : ..............................

போ.இல : ..............................

விடைகள் : 01) ..............................

02) ..............................

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

| | |
|---|---|
| தினமுரசு காரியாலயம் 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம். | தினமுரசு விளம்பரப் பணிமனை M.P.C.S. பில்டிங் 127, கே.கே.எஸ்.வீதி, யாழ். |


விடைகளை 28 ஆம் திகதி 12.00 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

## ஆஸி. இலகு வெற்றி

(புதுடில்லி)

நியூசிலாந்து அணிக்கெதிரான போட்டியில் அவுஸ்ரேலிய அணி ஏழு விக்கெட்டுக்களால் இலகுவான வெற்றி பெற்றது.

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 'ஏ' பிரிவு அணிகளான அவுஸ்ரேலிய, நியூசிலாந்து அணிகளுக்கிடையில் புதுடில்லி மைதானத்தில் நேற்று பகல் ஆட்டமாக இப்போட்டி இடம்பெற்றது. முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 45.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய அவுஸ்ரேலிய அணி 34 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக மிட்சல் ஜோன்சன் தெரிவானார்.



## தினமுரசு அவுஸ்ரேலியா எதிர் நியூசிலாந்து SCORE CARD

மைதானம் : நாக்பூர் திகதி : 25-02-2011 ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி அவுஸ்ரேலியா : முதலில் களத்தடுப்பு.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) ஜே. குப்ரில் | b வொட்சன் | 10 |
| 02) பிரெடன் மக்கலம் | c ஜெசன் கிரெய்ஜா b டெய்ட் | 16 |
| 03) ஜெசி ரைடர் | c ஹடின் b ஜோன்சன் | 25 |
| 04) ரொஸ் ரெய்லர் | b டெய்ட் | 07 |
| 05) ப்றைங்கிளின் | c ஹடின் b ஜோன்சன் | 00 |
| 06) ஸ்கொட் ஸ்ரைரிஸ் | c ஹடின் b டெய்ட் | 00 |
| 07) ஜே.எம். ஹவ் | lbw b ஸ்ரீபன் ஸ்மித் | 22 |
| 08) நேதன் மக்கலம் | lbw b ஜோன்சன் | 52 |
| 09) டானியல் விட்டோரி | c ஹடின் b பிரெட்லீ | 44 |
| 10) ரிம் சவுத்தி | c பொண்டிங b ஜோன்சன் | 06 |
| 11) ஹேர்மிஷ் பென்னட் | | 00 |
| உதிரிகள் | (b 1, lb 8, w 12, nb 2) | 24 |
| மொத்தம் | (all out : 45.1 ஓவர்கள்) | 206 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) ஷேன் வொட்சன் | b ன்னட் | 62 |
| 02) பிரெட் ஹடின் | c ப்ரெங்கிளின் b ன்னட் | 55 |
| 03) ரிக்கி பொண்டிங் | st எம். மக்கலம் b சவுத்தி | 12 |
| 04) மைக்கல் கிளார்க் | not out | 24 |
| 05) கமரன் வைட் | not out | 22 |
| 06) டேவிட் ஹசி | | |
| 07) ஸ்ரீபன் ஸ்மித் | | |
| 08) மிட்சல் ஜோன்சன் | | |
| 09) ஜேசன் கிரெய்ஜா | | |
| 10) பிரெட்லீ | | |
| 11) ஷோன் டெய்ட் | | |
| உதிரிகள் | (lb 3, w29) | 32 |
| மொத்தம் | (3 w; 34 ஓவர்கள்) | 207 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| பிரெட்லீ | 08 | 29 | 01 |
| ஷோன் டெய்ட் | 07 | 35 | 03 |
| மிட்சல் ஜோன்சன் | 9.1 | 33 | 04 |
| வொட்சன் | 3 | 09 | 01 |
| ஸ்ரீபன் ஸ்மித் | 09 | 44 | 01 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| ரிம் சவுத்தி | 10 | 45 | 01 |
| விட்டோரி | 07 | 39 | 00 |
| ஹேர்மிஷ் பென்னட் | 07 | 63 | 02 |
| நெதன் மக்கலம் | 03 | 22 | 00 |
| ஜெசி ரைடர் | 05 | 24 | 00 |

**7 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலிய அணி வெற்றி. ஆட்டநாயகன் : ஜோன்சன்**

ICC Cricket World Cup 2011

## இன்றைய ஆட்டம்

**இலங்கை எதிர் பாகிஸ்தான்**

மைதானம் :கொழும்பு.பகலிரவு ஆட்டம்



## முடிவிற்குக் கட்டுப்படுவேன்

எந்த முடிவு எடுத்தாலும் கட்டுப்படுவேன். அதற்கு முன், என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன் என அவுஸ்ரேலிய அணித் தலைவர் பொண்டிங் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இதுபோன்ற செய்திகள் எங்கிருந்து வருகின்றன என்றுதான் தெரியவில்லை. இதுதொடர்பாக ஐ.சி.சி., எந்த முடிவு எடுத்தாலும் கட்டுப்படுவேன். அதற்கு முன், என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் அல்லது எனது துடுப்பைக் கொண்டு வீரர்கள் அறையில் இருந்த ரி.வி.யை உடைக்கவில்லை என்றார்.

## தினமுரசு பங்களாதேஷ் எதிர் அயர்லாந்து SCORE CARD

மைதானம் : டாக்கா திகதி : 25-02-2011 ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி பங்களாதேஷ் : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) தமீம் இக்பால் | c போட்டபீல்ட b போத்தா | 44 |
| 02) இம்ருல் கயாஸ் | st ஓபிரயன் b மூனி | 12 |
| 03) ஜூனெய்ட் சித்திக் | run out (ஜொய்ஸ்) | 03 |
| 04) முஸ்பிகுர் ரஹ்மான் | c வைட் b டொக்ரெல் | 36 |
| 05) சாகிப் அல் ஹசன் | c& b போத்தா | 16 |
| 06) ராகிபுல் ஹசன் | run out (வைட்) | 38 |
| 07) மொகமட் அஷ்ரபுல் | c வைட் b டொக்ரெல் | 01 |
| 08) நயீம் இஸ்லாம் | c டொக்ரல் b ஜோன்ஸ்ரன் | 20 |
| 09) சாபியுல் இஸ்லாம் | lbw b போத்தா | 02 |
| 10) அப்துர் ரசாக் | b ஜோன்ஸ்ரன் | 11 |
| 11) ரூபெல் ஹொசெயின் | not out | 02 |
| உதிரிகள் | (b 2, w 8, nb1) | 11 |
| மொத்தம் | (all out : 49.2 ஓவர்கள்) | 205 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) ரி.எஸ். போட்டபீல்ட் | c ராகிபுல் b சாகில் அல் ஹசன் | 20 |
| 02) பி.ஆர். ஸ்ரேலிங் | st முஸ்பிகுர் b அப்துர் ரசாக் | 09 |
| 03) ஈ.சி. ஜொய்ஸ் | c&b மொகமட் அஷ்ரபுல் | 16 |
| 04) என். ஜே. ஓ பிரயன் | c இக்பால் b சாகில் அல் ஹசன | 38 |
| 05) ஏ.ஆர். வைட் | b மொகமட் அஷ்ரபுல் | 10 |
| 06) கே. ஜே. ஒபிரயன் | c (su சுவோ) b சாபியுல் இஸ்லாம் | 37 |
| 07) ஏ.சி. போத்தா | b சாபியுல் இஸ்லாம் | 22 |
| 08) ஜே.எவ். மூனி | b நயீம் இஸ்லாம் | 00 |
| 09) டி.ரி.ஜோன்ஸ்ரன் | lbw b சாபியுல் இஸ்லாம் | 06 |
| 10) ஜி.எச். டொக்ரல் | not out | 04 |
| 11) ரன்கின் | c சித்திக் b சாபியுல் இஸ்லாம் | 03 |
| உதிரிகள் | (lb 9, w4) | 13 |
| மொத்தம் | (all out; 45 ஓவர்கள்) | 178 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| டபிள்யூ பி ரன்கின் | 09 | 62 | 02 |
| டி.ரி. ஜோன்ஸ்ரன் | 8.2 | 40 | 02 |
| ஜே.எவ். மூனி | 07 | 25 | 01 |
| ஏ.சி. போத்தா | 09 | 32 | 03 |
| ஜி.எச். டொக்ரல் | 10 | 23 | 02 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| சாபியுல் இஸ்லாம் | 08 | 21 | 04 |
| அப்துர் ரசாக் | 08 | 30 | 01 |
| நயீம் இஸ்லாம் | 09 | 36 | 01 |
| சாகில் அல் ஹசன் | 08 | 28 | 02 |
| மொகமட் அஷ்ரபுல் | 09 | 42 | 02 |


**27 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணி வெற்றி. ஆட்டநாயகன் : தமீம் இக்பால்**

## பங்களாதேஷ் வெற்றி

(டாக்கா)

அயர்லாந்து அணிக்கெதிரான போட்டியில் பங்களாதேஷ் அணி 27 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. பத்தாவது உலகக் கிண்ணத் தொடரில் நேற்று டாக்காவில் நடைபெற்ற 'பி' பிரிவு பகலிரவு ஆட்டத்திலேயே பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி, 49.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய அயர்லாந்து அணி 45 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக தமீம் இக்பால் தெரிவானார்.



அனுசரணையாளர்: நேரடியாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கட்டடப் பொருட்களுக்கும் தேவையான அனைத்து இயந்திர வகைகள் மற்றும் நிறுத்தல் தராசு வகைகள் அனைத்து மாபிள் கொமட் வகைகள் எல்லாவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள ஒரே இடம்

ஸ்ரார் செரமிக்ஸ்


NO. 05, Stanley Road, Jaffna. (C/483)

T.P: 021 5672061,
Mobile: 0772510994, 0777578277 .
Email: vimalraja 43@yhoo.com.

ICC Cricket World Cup 2011

# இலங்கைத் தமிழரைக் கைவிடாமல் அவர்களின் பிரச்சினையை தீர்க்க வேண்டும்

## இந்திய அரசுக்கு ராஜா அறிவுறுத்து



(சென்னை)

இந்திய அரசு இலங்கைத் தமிழர்களைக் கைவிட்டு விட்டது. இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதும் இந்த அரசின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும் என மாநிலங்களவையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் டி.ராஜா உரையாற்றினார்.

குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மாநிலங்களவையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் டி.ராஜா உரையாற்றுகையில் -

சர்வதேச ஒப்பந்தங்களுக்கு எதிராக இந்திய மீனவர்களை, இலங்கை அரசு தாக்கி வருகிறது. இந்திய மீனவர்களையே நமது மத்திய அரசால் காப்பாற்ற முடியவில்லை என்றால், சார்க் மாநாடு போன்ற பிராந்திய அளவிலான ஒப்பந்தங்களால் என்ன பயன்?

தமிழக மீனவர்கள் பிரச்சினை தமிழ்நாட்டுக்கு மட்டும் உரித்தல்ல. இது ஒட்டுமொத்த நாட்டின் பிரச்சினை ஆகும். நமது மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும். நமது மீனவர்களுக்கு எதிராக எந்த நாடும் ராணுவத்தைப் பயன்படுத்தக் கூடாது. பிரதமர், வெளியுறவு அமைச்சர் ஆகியோர் இந்தப் பிரச்சினைகளில் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோல், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் இந்த உரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கடந்த ஆண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், இதுவரை அது தொடர்பாக எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இந்திய அரசு இலங்கைத் தமிழர்களைக் கைவிட்டு விட்டது. இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதும் இந்த அரசின் முக்கிய நோக்கமாக இருகக வேண்டும் எனத் தெரிவித்தார்.




# அண்ணா எதை விரும்பினாரோ அதை நிறைவேற்றுகிறதாம் தி.மு.க

(காஞ்சிபுரம்)

அண்ணா எதை விரும்பினாரோ அதை தி.மு.க. அரசு நிறைவேற்றி வருகிறது என, நிதியமைச்சர் அன்பழகன் பேசினார்.

காஞ்சிபுரம் மாவட்டம் கடம்பத்தூரில் ரூ.11/2 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடத் திறப்பு விழா நடைபெற்றது. விழாவில் நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் ஊராட்சி ஒன்றிய அலுவலக கடடடத்தைத் திறந்து வைத்தார். அப்போது பேசிய அவர்,

கலைஞர் ஆட்சியில் ஏராளமான அரசு கட்டடங்கள் பிரம்மாண்டமான அளவில் தமிழ்நாட்டில் கட்டப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக கடம்பத்தூரில் ரூ.11/2 கோடி செலவில் இந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு தமிழகத்தில் உள்ளாட்சி நிர்வாகத்திற்கு போதிய அதிகாரம் இல்லை. தற்போது மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றவுடன் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வந்து ஒவ்வொரு ஊராட்சியிலும் போக்குவரத்து, குடிநீர், மின்விளக்குகள், சுகாதாரம், பள்ளிக்கூடங்கள் வசதி என ஒவ்வொரு ஒன்றியத்திலும் சிறந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

டெல்லியில் நடந்த வைரம் பாராட்டு விழாவில் இந்தியாவில் உள்ள சிறந்த மாநிலத்திற்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது.

அப்போது வழங்கப்பட்ட 8 விருதுகளில் தமிழ்நாடு 4 விருதுகள் பெற்று சாதனை படைத்தது. பிரதமர் மன்மோகன்சிங்கே தமிழ்நாட்டைப் பாராட்டி பேசியுள்ளார்.

அண்ணா எதை விரும்பினாரோ அதை தி.மு.க. அரசு நிறைவேற்றி வருகிறது. கலைஞர் காப்பீட்டு திட்டம், கலைஞர் கொங்கிரீட் வீட்டுத் திட்டம், 108 இலவச ஆம்புலன்ஸ் சேவை அனைத்து கிராமப்பகுதிகளிலும் சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளது என்றார்.

# 8 மீனவர்கள் படுகொலை

(புதுடிலலி)

2008 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை இலங்கைப் படையினரால் 8 தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக மாநிலங்களவையில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வெளியுறவுத் துறை இணை அமைச்சர் இ.அகமது எழுத்து மூலம் அளித்த பதிலில்,

2008 ஆம் ஆண்டு 5 பேர் கொல்லப்பட்டனர். 2009 ஆம் ஆண்டு யாரும் கொல்லப்படவில்லை. 2010 இல் ஒருவர் கொல்லப்பட்டார். இந்த ஆண்டு ஜனவரியில் இருவேறு சம்பவங்களில் 2 மீனவர்கள் கொல்லப்பட்டனர் எனத் தெரிவித்துள்ளார்.

ஜனவரியில் பாண்டியன், ஜெயக்குமார் ஆகியோர் கொல்லப்பட்ட சம்பவங்களில் தங்கள் கடற்படைக்கு எந்தத் தொடர்பும் இல்லை என இலங்கை அரசு தெரிவித்ததாகவும் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் இ.அகமது எழுத்து மூலம் அளித்த பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

# காலாவதியான குளுக்கோஸ் ஏற்றல் 12 கர்ப்பிணிப் பெண்கள் பரிதாப பலி

(ஜோத்பூர்)

ராஜஸ்தான் அரசு மருத்துவமனையில் காலாவதியான குளுக்கோஸ் ஏற்றப்பட்டதனால் 12 கர்ப்பிணிப் பெண்கள் பரிதாபகரமாக உயிரிழந்ததுடன், மேலும் நால்வர் கவலைக்கிடமாக உள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் அரசு ஆஸ்பத்திரி உள்ளது. இங்கு பிரசவத்துக்காக தனிப்பிரிவு செயற்படுகிறது. இதில் பலவீனமான கர்ப்பிணிப் பெண்களுக்கு சக்தியை அதிகப்படுத்த குளுக்கோஸ் ஏற்றப்பட்டது. சிறிது நேரத்தில் அவர்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டது.

வேறு ஏதோ காரணத்தால் உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டதாகக் கருதி சிகிச்சை அளித்தனர். ஆனால் தீவிர சிகிச்சை அளித்தும் பலன் இல்லாமல் 12 பேர் பலியானார்கள். 4 பேர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முதலில் அவர்கள் ஏன் உயிர் இழந்தார்கள் என்பது தெரியாமல் இருந்தது. பின்னர் சோதனை நடத்தியதில் அவர்களுக்கு ஏற்றப்பட்ட குளுக்கோசில் கோளாறு இருப்பது தெரிந்தது. அவர்களுக்கு ஏற்றப்பட்ட குளுக்கோஸ் காலாவதியாகி இருந்ததே உயிர் இழப்புக்குக் காரணம் என்பதை கண்டுபிடித்தனர்.

இந்த ஆஸ்பத்திரிக்கு இந்தூரைச் சேர்ந்த பேரன்டன் சர்ஜிக்கல் என்ற மருத்துவ நிறுவனம் 5 ஆயிரம் போத்தல் குளுக்கோஸ்களை விநியோகம் செய்திருந்தது. அதில்தான் காலாவதியான குளுக்கோஸ்களும் இருந்துள்ளன.

இதையடுத்து மருந்து நிறுவனம் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் மாநிலம் முழுவதும் விநியோகம் செய்த அனைத்து குளுக்கோஸ் போத்தல்களையும் பயன்படுத்தக் கூடாது எனத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி விசாரிக்க 6 பேர் கொண்ட நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.





**தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்**

இரண்டாவது அகவையில்



பெயர்: க.மதுராஜி
முகவரி: துனைவி,
வட்டுக்கோட்டை.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .............................. பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு தள்ளுபடி

(சென்னை)

கச்சதீவு பகுதியில் மீன்பிடி உரிமைகளை தமிழக மீனவர்கள் அனுபவிப்பதற்காக அவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் தகுந்த பாதுகாப்பை வழங்க உத்தரவிடக்கோரிய வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

சென்னை உயர் நீதிமன்றில் பழைய பல்லாவரத்தைச் சேர்ந்த மீனவர் நலன் என்ற அமைப்பின் தலைவர் பீட்டர் ராயன் பொதுநலன் மனு தாக்கல் செய்திருந்தார்.

அதில், இந்தியப் பிரதமர் மற்றும் இலங்கைப் பிரதமர் ஆகி யோர் இடையே 1974 ஆம் ஆணடில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட உரிமைகளை, (கச்தீவு பகுதியில் மீன்பிடிக்கும் உரிமை உட்பட) இலங்கை கடற்படையினர் அனுபவித்து வருகின்றனர். ஆனால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து அவர்களால் கொலை செய்யப்படுகின்றனர்.

எனவே, இலங்கை கடற்படையின் மனித உரிமை மீறல்களை தடுக்கத் தவறிய இந்திய கடலோர பாதுகாப்புப் படை மீது விசாரணை நடத்த உயர் நிதிமன்ற நீதிபதி தலைமையில் குழு அமைக்க வேண்டும். 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி கிடைக்கும் உரிமையை அனுபவிப்பதற்காக தமிழக மீனவர்களுக்குத் தகுநத பாதுகாப்பு வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று அதில் கூறப்பட்டு இருந்தது.

மீனவர் நலன் தொடர்பாக மற்றொரு மனுவும் தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. இந்த 2 மனுக்களையும் தலைமை நீதிபதி எம்.வை.இக்பால், நீதிபதி டி.எஸ்.சிவஞானம் ஆகியோர் விசாரித்தனர். வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு -

இலங்கைக் கடற்படைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோர முடியாது என்பதை மனுதாரரின் வக்கீலே ஒப்புக்கொள்கிறார். எனவே அந்தக் கோரிக்கையை நீதிமன்று ஏற்கமுடியாது. எனவே அந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2 நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மீன் பிடிக்கும் உரிமைகளையும் அமுல்படுத்த வேண்டுமென்று மனுதாரர் கோரியிருக்கிறார். இந்த 2 மனுக்களில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள், இந்தியா இலங்கை நாடுகளின் உறவு சம்பந்தப்பட்டது.

இந்தப் பிரச்சினைகள் பற்றி இந்த நீதிமன்று ஆராய முடியாது. எனவே மனுதாரரின் வாததை ஏற்க முடியாது. மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்ச்செல்வன் மீதுநடத்தப்பட்ட தாக்குதல் வஞ்சம் தீர்ப்பதற்காக மேற்கொள்ளவில்லை

## விமானப் படைத்தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

புலிகள் இயக்கத்தினரால் அநுராதபுரம் விமானப்படைத் தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு வஞ்சம் தீர்க்கும் வகையில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்து வந்த எஸ்.பி தமிழ்ச்செல்வன் மீது அரச படையினர் தாக்குதல் நடத்தி இருக்கவில்லை. அநுராதபுரம் தாக்குதல் நடத்தப்படுவதற்கு நீண்ட காலத்துக்கு முன்பே புலிகள் இயக்க தலைவர்களை படையினர் வலை வீசித் தேடி வந்தனர். படையினரால் தேடப்பட்டோர் பட்டியலில் தமிழ்ச்செல்வனும் மிக முக்கியமான ஒருவராக இருந்தார்." இவ்வாறு தெரிவித்து உள்ளார் விமானப் படைத் தளபதி சீப் எயார் மார்ஷல் டபிள்யூ. டி.ஆர். எம்.ஜே.குணதிலக.

இவர் விரைவில் கடமையில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.

இந்நிலையில் உள்நாட்டு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இவர் இப்பேட்டியில் முக்கியமாகத் தெரிவித்துதுள்ளதாவது,

"புலிகளால் அநுராதபுரம் தாக்குதல் நடத்தப்பட்டு சில வாரங்களில் படையினரால் தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டார். ஆனால் இது பழிவாங்கல் நடவடிக்கையாக இடம் பெற்று இருக்கவில்லை. புலித் தலைவர்களை மிக நீண்ட நாட்களாகவே தேடி வந்தோம். அரச படையினரால் தேடப்பட்டு வந்த புலித் தலைவர்களில் தமிழ்ச்செல்வனும் முக்கியமானவர்.

புலனாய்வுப் பிரிவினர் சரியான முறையில் தகவல்களைப் பெற்றனர். தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் உள்ளார் என நவம்பர் முதலாம் திகதி புலனாய்வுப் பிரிவினருக்கு மிகவும் உறுதியான தகவல் கிடைத்தது.

எனவே தமிழ்ச்செல்வனின் மறைவிடத்தை விமானங்கள் மூலம் தாக்கினோம். மிகவும் கடினமான இலக்குத் தான். ஆனால் எமது விமானிகள் சாதித்து விட்டனர். தமிழ்ச்செல்வனின் படுகொலை புலிகள் இயக்கத்தை கதி கலங்க வைத்தது. நாம் எப்படித் தமிழ்ச்செல்வனின் மறைவிடத்தைக் கண்டு பிடித்தோம்? என்பது புலிகள் இயக்கத் தலைவர்களுக்கு மூடு மந்திரமாகவே இருந்தது. எனவே நிலத்துக்குக் கீழ் கட்டப்பட்ட கட்டிடங்களில் பதுங்கி இருந்து கொண்டனர். தலைவர்கள் களத்துக்கு செல்லாமல் இருந்தமையால் புலிகளின் இராணுவ பலம் குன்றியது.

ஈழப்போர்-04 ஐ பொறுத்த வரை புலிகளால் 2007 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்ட அநுராதபுரம் விமானப் படைத் தளம் மீதான தாக்குதல் மிகப் பேரழிவைப் படையினருக்கு ஏற்படுத்தி இருந்தது. இத்தாக்குதலுக்கு 23 தற்கொலைக் குண்டுதாரிகளைப் புலிகள் பயன்படுத்தி இருந்தனர். ஆனால் அங்கு இருந்த எல்லாக் கட்டமைப்புக்களையும் அவர்களால் அழிக்க முடியவில்லை.

அரசு- தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோருக்கு இடையிலான 30 வருட கால யுத்தத்தில் படையினருக்கு மிக மோசமான தோல்வி ஆனையிறவு 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புலிகள் வசம் வீழ்ந்ததே ஆகும்.

30 வருட கால யுத்தத்தில் மிகப் பெரிய திருப்பு முனையாக படையினருக்கு அமைந்த விடயம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ,பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் தலைமை ஆகும். இருவரும் சகோதரர்கள். எனவேதான் அனைத்து விதமான தடைகளையும் உடைத்துப் புலிகளை வெல்ல முடிந்தது.

# வாகரையில் ஆயுதங்கள் மீட்பு



(கொழும்பு)

வாகரை மயானத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த யுத்த உபகரணங்கள் மற்றும் வெடிமருந்துப் பொருட்கள் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் வாகரையில் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே இப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும் அதற்கான ரவைகள் 28, கைக்குண்டு மற்றும் கண்ணிவெடி ஒன்றும் மற்றும் சி4 ரக வெடிமருந்து 200 கிராம் என்பனவும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

# தமது பொறுப்பிலிருந்த படையினர்,சிவிலியன்களை புலிகள் எரியூட்டி கொலை செய்தனரென குற்றச்சாட்டு



(கொழும்பு)

புலிகள் தங்கள் பொறுப்பில் இருந்த சிவிலியன்களையும், கைது செய்யப்பட்டிருந்த பாதுகாப்புப் படையினரையும் படுகொலை செய்து எரியூட்டியதாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திடம் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடன் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் . செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க ஆகியோருடன் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் துணைப் பிரதிநிதி சவேந்திர சில்வாவும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் மற்றும் அதன் தலைமை அதிகாரி விஜய் நம்பியார் ஆகியோர் இலங்கை அதிகாரிகள் குழுவுடனான கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர்.

விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட போர் நடைபெற்ற காலகட்டத்தில் காயமுற்ற பல விடுதலைப் புலி உறுப்பினர்களை விமானங்கள் மூலமாகக் கொழும்புக்கு அனுப்பி சிகிச்சை பெறுவதற்கான வசதிகளை நான் செய்து கொடுத்திருந்தேன்.

அவ்வாறிருக்கையில் தற்கொலைத் தாக்குதல்கள் போன்ற செயற்பாடுகள் மூலம் பயங்கரவாதச் செயற்பாடுகளை மேற்கொண்ட விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய தரப்பினரே இலங்கை மீது போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை முன் வைக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து பொதுமக்களை மீட்டெடுக்கும் மனிதாபிமான நடவடிக்கையில் பங்குபற்றியிருந்த அனைத்துப் படைவீரர்களும் மனிதாபிமான சட்ட திட்டங்களை நன்கு அறிந்து வைத்திருந்தனர்.

ஆயினும் விடுதலைப் புலிகள் தான் தங்கள் பொறுப்பில் இருந்த சிவிலியன்கள் மற்றும் தங்களால் கைது செய்யப்பட்டிருந்த படை வீரர்கள் ஆகியோரைப் படுகொலை செய்து, எரியூட்டி போர்க்குற்றங்களில் ஈடுபட்டிருந்தனர் என்றும் அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

# யாத்திரை சென்ற வேளையில் விபத்தில் சிக்கி இலங்கையர்பலி



(கொழும்பு)

.இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் உள்ள புத்தகாயா புனிதத் தலத்துக்கு யாத்திரை சென்று கொண்டிருந்த இலங்கையர் குழு ஒன்றின் பஸ் சொன்வர்சா என்கிற கிராமத்தில் விபத்தில் சிக்கியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தார். 13 பேர் காயம் அடைந்தனர்.

உத்தரப் பிரதேசத்தில் இருந்து இந்த பஸ் புறப்பட்டுச் சென்றிருந்தது.

இதில் 45 இலங்கையர்கள் பயணித்திருந்தனர்.

சாரதி கட்டுப்பாட்டை இழந்தமையால் விபத்து நேர்ந்து இருக்கின்றது.

கலாவதிதேவி என்பவரே இறந்தவர் ஆவார். காயப்பட்டவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இருவரும் அவசரமாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# மூவர்கைது

(கொழும்பு)

ஆயுத முனையில் கொள்ளை அடித்த குற்றச்சாட்டில் இத்தாலியில் இலங்கையர் மூவர் கைதாகி உள்ளனர். ஒருவருக்கு வயது 28. இன்னொருவருக்கு 47. மற்றவருக்கு 51. பார்மஸி ஒன்றுக்குள் துப்பாக்கியுடன் புகுந்து, ஊழியர்களை மிரட்டிப் பணத்தைக் கொள்ளை அடித்தனர் என்ற குற்றச்சாட்டில இவர்கள் கைதாகியுள்ளனர்.

# உடன்படிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய இலங்கைக்கான சீனாவின் ஒத்துழைப்பை மேலும் விரிவூ படுத்த அந்நாட்டுடன் புரிந்துணர்வூ உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திட அமைச்சரவையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்காக சீனா 50 மில்லியன் யூவான்களை வழங்கவும் முன் வந்துள்ளது.

# தேர்தலைக்கண்டு அஞ்சும் அரசாங்கம்

(கொழும்பு)

அரசாங்கம் தேர்தலைக் கண்டு அஞ்சுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தேர்தலுக்கு முகம் கொடுக்க அரசாங்கம் அஞ்சுகின்றது. மக்கள் நினைப்பு என்ன என்பது இன்று யாருக்கும் தெரியும். தயவு செய்து எதிர்வரும் தேர்தலை நன்றாக நடத்தி முடித்து மற்றைய நடவடிக்கைகளைத் தொடருங்கள். இது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல். இந்தப் போட்டியை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு விளையாட்டாக நடாத்த தயார் என்றால் அதன்படி விளையாட நாங்களும் தயார் என்றும் கரு ஜயசூரிய தெரிவித்தார்.



# கொழும்புவந்த பங்களாதேஷ் தளபதி ஜனாதிபதி மஹிந்தவுடன் சந்திப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பங்களாதேஷ் படைத்தளபதி ஜெனரல் முஹமட் அப்துல் முபீன் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இச் சந்திப்பில் இரு நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது குறித்து ஆராயப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் ஜெனரல் ஜகத் ஜயசூரியாவும் கலந்து கொண்டார்.

பங்களாதேஷ் படைத் தளபதி ஜெனரல் முஹமட் அப்துல் முபீன் நேற்றுமுன்தினம் காலை படைத் தலைமையகத்துக்கும் விஜயம் செய்திருந்தார்.

இவருக்குப் படைத் தலைமையகத்தில் செங்கம்பள வரவேற்பும் இராணுவ அணி வகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டது.

இதனையடுத்து படைத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜயசூரியாவுக்கும், இவருக்கும் இடையில் படைத் தலைமையகத்தில் பேச்சுவார்த்தை இடம் பெற்றது.

இப் பேச்சுவார்த்தையில் இரு நாடுகளுக்கும் இடையிலான படைத்தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாகச் செய்திகள் குறிப்பிட்டன.

இந்தச் சந்திப்பில் பங்களாதேஷ் படைத்தளபதி ஜெனரல் முஹமட் அப்துல் முபீனுக்கு படைத்தளபதி ஜகத் ஜயசூரிய நினைவுப் பரிசையும் வழங்கினார்.

இவர் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் படைத்தரப்பின் உயர் அதிகாரிகள், முப்படைகளின் தளபதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முக்கிய படைத் தளங்களுக்கும் பங்களாதேஷ் படைத்தளபதி ஜெனரல் முஹமட் அப்துல் முபீன் செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் படைத்தரப்புப் பெற்ற அனுபவங்கள் குறித்து இவர் அறிந்து கொள்ளவுள்ளதாகவும், போர் இடம்பெற்ற பகுதிகளை நேரில் பார்வையிடச் செல்லவுள்ளதாகவும் படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரான்ஸ் உல்லாசப் பயணி கடலில் மூழ்கி உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு உல்லாசப் பயணத்தை மேற்கொண்டு வந்த பிரான்ஸ் பிரஜை ஒருவர் கடலில் நீராடியவேளை உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் சாள்ஸ் றொபேட் (வயது 52) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

தனது குடும்பத்தாருடன் ஓய்வைக் கழிக்கும் வகையில் குறுகிய கால இடைவெளியில் இலங்கை வந்த மேற்படிநபர் களுத்துறையிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார். நேற்று முன்தினம் இவர் களுத்துறைக் கடலில் குடும்பத்தாருடன் குளிக்கச் சென்று அங்கு நீராடியவேளை கடலில் மூழ்கி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை நடத்தப்பட்ட பின்னர்,மனைவியிடம் கையளிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆசிரியர் மீது தாக்குதல்

(வவுனியா)

வவுனியா நகரில் உள்ள பிரபல பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் தாக்கப்பட்டதுடன் அவரது மோட்டார் சைக்கிளும் சேதமாக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் தாக்குதல சம்பவத்தினால் படுகாயங்களுக்கு உள்ளான ஆசிரியர், வவுனியா மாவட்ட அரசினர் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு 8 மணியளவில் கதிரேசு வீதியினூடாகப் பயணித்துக் கொண்டிருந்த மேற்படி ஆசிரியரை வழிமறித்துள்ள இனந்தெரியாத சிலர், பொல்லுகளால் அவரைத் தாக்கியதுடன் மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அக்கராயன்,அம்பாள்நகர் மக்களுக்கு உதவிப்பொருட்கள் வழங்கப்பட்டன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன்குளம் மற்றும் அம்பாள் நகர் பகுதியில் அடிப்படை வசதிகளற்ற குடும்பங்களுக்கு 632 ஆவது பிரிகேட்டினால் சைக்கிள்களும், உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

இப்பகுதிகளில் அடிப்படை வசதிகளற்று வாழ்பவர்கள் தொடர்பான விபரங்களை கிராமசேவகர்கள் ஊடாகத் திரட்டிய படையினர், மேற்படி உதவிப் பொருட்களைக் கையளித்தனர்.

அக்கராயன்குளம் மகாவித்தியாலயம்,அம்பாள்நகர் கலைமகள் வித்தியாலயம் ஆகியவற்றில் வைத்து 125சைக்கிள்களும் 150 உலர் உணவுப் பொதிகளும், மக்களுக்குக் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட தளபதி மற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதேவேளை விவேகானந்த நகர் கிராமத்தில் அழிவடைந்துள்ள முன்பள்ளிக் கட்டடத்தை 571 ஆவது பிரிகேட் படையினர் புனரமைத்து வருகின்றனர். இதற்கான உதவியை கொழும்பிலுள்ள கன்னியாஸ்திரிகள் அமைப்புச் செய்து வருகின்றது.

புனரமைப்பு வேலைகள், குறுகிய காலத்தில் முடிவடையவுள்ளதனால் அப்பகுதிச் சிறுவர்கள் இந்தக் கட்டடத்தில் கல்வியைத் தொடர முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.


# தேர்தலை நிறுத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லையாம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நிறுத்துவதற்கு அரசுக்கு எவ்வித உத்தேசமும் இல்லை என தகவல் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும் வகையிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக தேர்தல் செயலகம் மற்றும் நீதிமன்றம் என இரண்டு



சுயாதீன நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. அவற்றின் நடவடிக்கைகளில் அரசாங்கத்துக்குத் தலையிட முடியாது. நீதிமன்ற விடயம் குறித்து கருத்துத் தெரிவிக்கவும் முடியாது.

எந்தெந்த நேரத்தில் என்னென்ன மாற்றங்கள் வரும் என்பதை அறிய முடியாத வகையில் குழப்ப நிலையிலேயே தாமும் இருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மானிய விலையில் பிளாஸ்ரிக் கூடைகள்

(கொழும்பு)

மரக்கறிவகைகளை சந்தைப்படுத்துவதற்காக எடுத்துச் செல்கையில் அவை பழுதடையாமல் இருக்கும் வகையில் அரசாங்கத்தால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பிளாஸ்ரிக் கூடைகளை மானிய விலைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதன்படி கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோவின் ஆலோசனைக்கு அமைய நான்கு இலட்சம் பிளாஸ்ரிக் கொள்கலன்கள் ஐம்பதுவீதமானிய விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன.

எனவே விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள்,இந்த மானிய விலையிலான பிளாஸ்ரிக் கூடைகளை வாங்கி மரக்கறி வகைகளைப் பாதுகாக்கலாம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நாட்டிலுள்ள அனைத்து விசேட பொருளாதார மத்திய நிலையங்களினதும் முகாமைத்துவ நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக தேசிய நிர்வாக செயற்குழு ஒன்றை அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மூவர் விடுதலை

(மன்னார்)

மன்னார்,மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் கொழும்பு பயங்கரவாத தடுப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்ட 5 பேரில் மூவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு இல. 8 நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி இம் மூவரையும் குற்றமற்றவரெனக் கருதி விடுவித்ததாக மன்னார் மாவட்ட சட்டத்தரணி திருமதி ஷராய்பா தெரிவித்தார்.

பேசாலையைச் சேர்ந்தவர்களான அருள்சீலன் மெராண்டா,சந்தியோகு மெசனட்குரூஸ், ஜெயராஜ் பெனோ பெல்டானா ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

# சிறியரக வாகன உற்பத்தி நிலையம் இந்திய உதவியுடன் நிறுவப்படும்

(கொழும்பு)



முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்ற சிறிய ரக வாகனங்களைப் பொருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இரத்மலானையில் ஐடியல் மோட்டர்ஸ்' என்ற பெயரில் தொழிற்சாலையொன்று அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் மகேந்திரா குழுமத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படவுள்ள இத் திட்டத்தில் உருவாக்கப்படும் சிறிய ரக வாகனங்கள் ஐடியல் லொக்கா' எனப் பெயர் சூட்டப்படும் என்றும் மார்ச் மாதம் இறுதிப் பகுதியிலிருந்து இத்திட்டம் செயற்படத் தொடங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனத் தொழில்நுட்ப கற்கை நெறிக்காக கல்லூரியொன்றை விரைவில் ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஐடியல் மோட்டர்ஸ்' நிறுவனத்தின் தலைவர் நளின் வெல்கம தெரிவித்துள்ளார்.

# வீட்டுத்திட்ட இலகுகடன் வழங்கலில் தேசிய சேமிப்பு வங்கியும் இணைந்தது

(கொழும்பு)

ஜனசெவன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள ஒரு மில்லியன் வீட்டுத்திட்டத்திற்கான இலகு கடன் திட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியும் இணைந்துள்ளதாக வீடமைப்பு மற்றும் பொறியியல் நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வீடமைப்புத் திட்டத்திற்கு இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றுடன் இணைந்து தேசிய சேமிப்பு வங்கியும் இந்த இலகு கடனை வழங்கும். இந்தவருட இறுதிக்குள் 20 ஆயிரம் அரச ஊழியர்களுக்கு வீடமைப்புக்கான கடன் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் குறைந்தளவு நிபந்தனைகளையுடைய இந்த வீடமைப்புத்திட்டத்திற்கான இலகு கடனைப்பெறுவதற்கு பெருமளவான அரச ஊழியர்கள் விண்ணப்பித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் புதிய கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது



(யாழ்ப்பாணம்)

கல்விச் செயற்பாடுகளில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை வடமாகாணத்தில் மட்டுமல்ல, எதிர்காலத்திலும் தேசிய ரீதியில் சாதனைகள் புரிய வேண்டும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் புதிய கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கின் வசந்தம் திட்டத்திற்குள் அமையப்பெற்ற கட்டடத் தொகுதியே திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கட்டடத்தை பிரதம விருந்தினர் பசில் ராஜபக்ஷ அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். அங்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ் வில் சிறப்புரையினை பசில் ராஜபக்ஷ அவர்கள் நிகழ்த்தினார்.

முன்பதாக கல்லூரி மாணவர்களின் இசை அணிவகுப்புடன் பிரதம விருந்தினர் உள்ளிட்ட விருந்தினர்கள் மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டதுடன், அங்கு தேசியக் கொடியினை பசில் ராஜபக்ஷ அவர்களும் மாகாணக் கொடியினை ஆளுநர் சந்திரசிறி அவர்களும் மாவட்டக் கொடியினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் ஏற்றி வைத்தனர்.

இந்த நிகழ்வில் , அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, டலஸ் அழகப்பெரும, ஆளுநர் சந்திரசிறி, ஈ.பி.டி.பி. யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், யாழ் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, கிளிநொச்சி யாழ். மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இளங்கோவன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## வடக்கு-கிழக்கு நீதிமன்றங்களுக்கு....

என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய உறுதி அளித்துள்ளார்.

இம்மாகாணங்களில் நீதித்துறையை வளர்த்தெடுக்கின்றமை தொடர்பாக ஆராயும் மந்திராலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று உயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா, பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இன்றைய யுத்தம் அற்ற சூழலில் இம்மாகாணங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய பல்வேறு நீதித்துறைச் சார்ந்த நடவடிக்கைகளின் அவசியத்தை நீதியமைச்சர் வலியுறுத்தினார்.

குறிப்பாக இம்மாகாணங் களில் உள்ள நீதிமன்றங்களில் சேவையாற்றுகின்றமைக்காக தமிழ்ப்பேசும் பொலிஸாரை அதிகமாகக் கடமையில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தமிழ் மொழியில் கருமம் ஆற்றக்கூடிய இரண்டாயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டு இருக்கின்றனர் என்றும், தமிழ் தெரிந்த பொலிஸாரை இம்மாகாணங்களில் அதிகமாக நியமிக்கின்றமைக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சருக்கு பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்தார்.

## படைத்தளபதிகளுடன்....

தற்போது அனேகமான உயர்மட்ட பதவி நிலைகளுக்குப் புதிய படை அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் உயர்படை அதிகாரிகளுடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணும் முயற்சிகளில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் தற்போது அதிக அக்கறை செலுத்தி வருகின்றனர்.

இதன் அடிப்படையிலேயே, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டெனிஸ், இலங்கைக்கான புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திஸநாயக்கவை கடந்த 23 ஆம் திகதி சந்தித்து முக்கிய விவகாரங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இலங்கையின் கடற்படைத் தலைமையத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் லெப்.கேணல் லோறன்ஸ் சிமித்தும் கலந்து கொண்டார்.

இலங்கை கடற்படையின் புதிய தளபதியாக வைஸ் அட்மிரல் சோமதிலக திஸநாயக்க பொறுப்பேற்றுக் கொண்டமைக்கு இச்சந்திப்பின் போது இலங்கைக் கான அமெரிக்கத் தூதுவர் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

அண்மைய நாட்களில் புதிதாகப் பதவியேற்கும் படைத் தளபதிகளுடன் அமெரிக்கா நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தி வருகின்றது. இவ்வடிப்படையிலே இலங்கை கடற்படைத் தளபதியை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற வைஸ் அட்மிரல் சோமதிலக திஸநாயக்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ்ப்பாணத்தில்....

இந்த மாடிக் கட்டடத்தைத் திறந்து வைத்து அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை உருவாக் குவதற்கான கட்டட அமைப்புக் களை மேற்கொள்வது தொடர்பாகப் பல்வேறு நாடுகளுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அவர் கலந்துரையாடி வருவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இன்று பிரதானமாக இரண்டு நிறுவனங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. ஒன்று தேசிய வியாபார முகாமை நிலையம் மற்றையது யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரி என்பனவாகும்.

யுத்த சூழ்நிலை காரணமாக கடந்த 2006ஆம் ஆண்டு காலத்தில் இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் இங்கிருந்து விலகிச் செல்லும் நிலையில் இருந்தபோதும் கூட, ஜனாதிபதியின் யாழ்.அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியது வடகொரிய நிறுவனமே. எனவே யாழ்.மக்க ளுக்கு தொழில்நுட்பவியல் கல்லூரியை நிறுவித்தந்த கொரிய நாட்டிற்கு எமது நன்றிகள் எனவும் அவர் தெரிவித்தார். (பா)

## பிரதியமைச்சரின் மகன் ரகளை

(கொழும்பு)

திஸ்ஸவாவி பகுதியில் சுவரொட்டிகளை ஒட்டும் பணியில் ஈடுபட்டிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்கள் இருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் பிரதியமைச்சர் ஒருவரின் மகன் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசேட பொலிஸ் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட இவர், அநுராதபுர நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண்ணின் சடலம் தவறான தகவல்

(யாழ்ப்பாணம்)

தீவகம் - ஊர்காவற்றுறையில் பாழடைந்த கிணற்றிலிருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டதாக வெளிவந்த தகவல்களில் உண்மை எதுவும் இல்லை என்று தற்போது அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் குறித்து எமது செய்தியாளர் மேலதிக தகவலைப் பெறும் பொருட்டு எடுத்த முயற்சியின்போது குறித்த சம்பவம் எதுவும் அங்கு நடைபெறவில்லை என்பது தெரியவந்துள்ளது.

## ஆசியாவின்...

நலிவடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தென்கிழக்காசிய மத்திய ஆளுனர்களின் 46 ஆவது மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இரட்டை நிலைப்பாடு, அரசியல் கலந்த நிதிக்கொள்கை போன்ற காரணிகளினால் நிதி நெருக்கடி ஏற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். மேற்குலக நாடுகளை விடவும், ஆசிய நாடுகளின் பொருளாதாரம் ஸ்திரமான நிலையில் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் முதனிலை நிதி நிறுவனங்களில் ஏற்படக் கூடிய வீழ்ச்சி உலகப் பொருளாதாரத்தை அதிரச் செய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

## அரசு...

இடம்பெறவுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தையில் அரசாங்க தரப்புச் சார்பில் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தலைமையிலான அமைச்சர் குழுவொன்று கலந்து கொள்ளவுள்ளது.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அக்கட்சியின் தலைவர் ஆர்.சம்பந்தன் தலைமையிலான குழு கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.பொது நூலகத்தை.....

அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார்.

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் (NIBM) யாழ் கிளை மற்றும் தென்கொரிய அரசாங்கத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் புதிய கட்டடம் ஆகியவற்றின் திறப்புவிழாவின் பின் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் அழகப்பெரும இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

யாழ்.மாவட்ட சபைத் தேர்தலில் வாக்குச் சாவடிகளுக்குள் அத்துமீறி நுழைந்து வாக்குசீட்டுகளில் மோசடி செய்து, யாழ் மக்களுக்கு வாக்குச்சீட்டில் இருந்த நம்பிக்கையை இல்லாமல் செய்தவர்கள் இன்று தமிழ்மக்களின் அரசியல் உரிமை குறித்துப் பேசுகின்றனர்.

தவறான பொருளாதாரக் கொள்கை மூலம் யாழ் விவசாயிகளின் பொரு ளாதாரத்தை அழித்தவர்கள் யாழ்.விவசாயிகள் பற்றிப் பேசுகின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் கடந்த கால அச்சம், சந்தேகம் என்பவற்றை ஒழித்து அனைத்து மக்களும் அனைத்து இளைஞர், யுவதிகளும் ஐக்கியமாக வாழும் நிலையை ஏற்படுத்தி வருகிறது.

கடந்த 30 வருடகால யுத்தம் காரணமாக யாழ்ப்பாணத்திற்கு நவீன தொழில்நுட்பம், முதலீடுகள் என்பன வரவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

தற்போது 30 வருட கால யுத்தத்தினால் இழந்த உயிர்கள், இழந்த குழந்தைப்பருவ, இளமைப்பருவ மகிழ்ச்சிகளைத் தவிர ஏனைய எல்லாவற்றையும் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இதன் அடிப்படையில் , அதிநவீன கல்வி நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் இன்று திறந்துவைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகக் கல்விக்குச் சமனான உயர்தரம்வாய்ந்த கல்வியை இந்நிறுவனங்களில் பெற்றுக்கொள்ள முடியும். இன்று திறக்கப்பட்ட NIBM கிளை விரைவில் பட்டப்படிப்புகளை பெறக்கூடிய நிறுவகமாக மாறிவிடும்.

உலகின் ஏனைய பகுதிகளைவிட இங்குள்ள மக்கள் தமது பிள்ளைகளின் கல்வி விடயத்தில் அதிக அக்கறை மிக்கவர்கள். அதனால்தான் யுத்த காலத்தில்கூட தமது பிள்ளைகளின் பாடசாலை, பல்கலைக்கழகக் கல்வி நடவடிக்கைகளை அவர்கள் முன்னெடுத்துச் சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் முன்னெடுக்கப்படும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வுள்ளன என்றார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகப் பங்குபற்றினார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதியமைச்சர் துமிந்த திஸாநாயக்க, இலங்கைக்கான தென் கொரியத் தூதுவர் சோய் கீ சூல், யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, ஈ.சரவணபவன், ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், யாழ். பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். (பா)


## யாழ்.நகர அபிவிருத்தியில்....

மற்றும் கிளாபோடாசியஸ் உள்ளிட்ட பெருமளவிலானோர் உடனிருந்து தமது அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்தினார்கள்.

யாழ். நகரப் பகுதியில் உடனடியாக அபிவிருத்தி மேற்கொள்ள வேண்டிய பகுதிகளைப் பார்வையிட்டதன் தொடர்ச்சியாக யாழிலுள்ள தமது பணிமனையில் உயர்மட்ட சந்திப்பொன்றினையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நடாத்தினார்.

இவ்வுயர்மட்ட சந்திப்பில் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.பிரதேச செயலாளர் திருமதி எஸ்.தெய்வேந்திரம், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, சட்டத்தரணி தேவராஜா ரங்கன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடபிராந்திய உதவிப் பணிப்பாளர் ராஜநாயகம், வடபிராந்திய நில அளவையியல் உதவி நாயகம் ஈஸ்வரமூர்த்தி, யாழ்.மாநகரசபை சட்ட ஆலோசகர் ராஜரட்ணம், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ராஜ்குமார் ஆகியோர் பங்குகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் நகர அபிவிருத்தி, அதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள், எதிர்கால செயற்பாடுகள் என்பன குறித்து அபிப்பிராயங்கள், ஆலோசனைகள் திட்டங்கள் என்பன விரிவாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



தாவாந்துறைப் ... சபை, யாழ்ப்பாணம்

# “அமைச்சர் டக்ளஸ் காலத்திலேயே யாழ். குடாநாடு அபிவிருத்தியடையும்”

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலி- பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நேற்று சிறப்பாக இடம்பெற்றதுடன், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பிரதம அதிதியாக பங்கு கொண்டு சிறப்பித்தார்.


நேற்று மாலை இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், பங்குகொள்வதற்காக வருகை தந்த அமைச்சரவர்களையும் அதிதிகளையும் பாடசாலை சமூகத்தினர் மலர்மாலை சூடியும், பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடனும் அழைத்துச் சென்றனர். இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் - 2011 இன் நிறைவினைத் தொடர்ந்து இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் தலைமையுரையாற்றிய அதிபர் திருலோகராஜன் அவர்கள், எமது மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இலங்கை முழுவதிற்குமான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக விளங்குகின்றார். அவரது காலத்திலேயே எமது யாழ். குடாநாடு அபிவிருத்தி அடையும் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அத்துடன் மிகவும் பின்தங்கிய பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தின் தேவைகள் குறித்த கோரிக்கைகளையும் தெரியப்படுத்தினார்.

நேற்றைய இல்ல மெய்வல்லுநர் போட்டியில் சிறப்புரையாற்றிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் அவர்கள், எமது கட்சியின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழிநடத்துதலில் செயற்படும் நாம், சொன்னதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், எனது தாயார் இதே பிரதேசத்தைச் சேர்ந்தவர். எனது தாயாரின் தாயும் இதே பிரதேசத்தைச் சேர்ந்தவர். இதன்காரணமாக மட்டுமன்றி தமிழ்பேசும் மக்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அவர்கள், அனைவருமே எமது உறவுகளே. இன்று அழிந்து போயுள்ள எமது தேசத்தை கட்டியெழுப்ப சமுதாயத்தில் நாம் கல்வி வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதிபரின் கோரிக்கையினை ஏற்ற எமது அமைச்சர் உடனடியாகவே மூன்று கணினிகளை வழங்கியதன் காரணமும் மாணவச் செல்வங்கள் கல்வியில் முன்னேற வேண்டும் என்பதற்காகவே எனத் தெரிவித்ததுடன், கடந்த காலத்தில் 16 வயதை அடைந்த பிள்ளைகளை வீட்டில் காண முடியாது. பிழையான வழியில் ஈடுபடுத்தப்பட்ட அவர்கள் அழிவை நோக்கிப் போனார்கள். ஆயினும் 2009 மே மாதம் 19ஆம் திகதிக்குப் பின்னர் அந்நிலைமை முற்று முழுதாக மாறிவிட்டது. இன்று நாம் கல்வி வளர்ச்சியினை கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு ஒருவரை மட்டும் பொறுப்பு கூறாமல் அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர்கள் அனைவரும் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள அமைதி நிலைமையினை சகித்துக் கொள்ள முடியாத சில சக்திகள் மீண்டும் இருண்ட யுகத்தை ஏற்படுத்த முனைகின்றார்கள். அதற்கு நீங்கள் எவ்வகையிலும் இடமளிக்கக் கூடாது. அரசாங்கத்துடன் இணக்கத்துடன் செயற்பட்டே எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எதிர்ப்பு அரசியலினால் எதனையும் சாதிக்க முடியாது.



எமது செயலாளர் நாயகம் அமைச்சரவர்கள் வழங்கும் உதவிகள் அரசியலுக்காக வழங்கப்படுபவை அல்ல. 1990ஆம் ஆண்டு சகலராலும் கைவிடப்பட்டு அந்தரித்த தீவக மக்களுக்கு நாம் அரசியலை எதிர்பார்த்தா உதவிகளை வழங்கினோம்? இன்று அதே உதவிகளை தமிழ்பேசும் மக்கள் வாழும் பிரதேசமெங்கும் நிலைகொண்டு மேற்கொண்டு வருகின்றோம்.

எங்களை அழிக்க நினைத்தவர்கள் அழிந்து போனார்கள். எம்மீது சேறு பூசுபவர்கள் பூசிக்கொண்டே இருக்கட்டும். காலம் அவர்கள்மீது சேறு பூசும். இதுதான் வரலாறு. அவ்வாறு சேறு பூசுபவர்களின் சுயரூபம் விரைவில் வெளிவரும். எனவே மீண்டும் மீண்டும் ஏமாறாமல் சந்தர்ப்பதை சரியாகப் பயன்படுத்துவோம். எதிர்வரும் காலத்தில் எமக்கு கிடைக்கவிருக்கும் சந்தர்ப்பங்களையும் சரியாக பயன்படுத்தி எமது எதிர்காலத்தை வளப்படுத்துவோம். இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் தனதுரையில் தெரிவித்தார்.

நிகழ்வின் பிரதம அதிதியாக பங்கு கொண்டு முதன்மை உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், பாடசாலையின் அபிவிருத்தி குறித்து தாம் கூடிய கவனம் செலுத்துவதாகவும் அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க உடனடியாகவே மூன்று கணினிகளை வழங்குவதாகவும் ஏனைய தேவைகளை கட்டம் கட்டமாக விரைவிலேயே நிறைவேற்றித் தருவதாகவும் பலத்த கரகோஷத்தின் மத்தியில் தெரிவித்தார்.

உரைகளைத் தொடர்ந்து மெய்வல்லுநர் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களையும் வெற்றிக்கேடயங்களையும் அமைச்சரவர்கள் வழங்கி வைத்தார்.

நேற்றைய நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் வலிகாம பிரதேச இணைப்பாளர் ஜீவன் அச்சுவேலி பொறுப்பாளர் தர்மராசா, அச்சுவேலி பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி ஜனக சாஸ்திரி, பிரதேச பிரமுகர் சின்ன மணி ஐயா உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினர் பங்கு கொண்டனர்.

## விமானப்படைக்கு அகவை அறுபது; அடுத்த வாரம் சகாச கண்காட்சி

(கொழும்பு)

இலங்கை விமானப் படையின் அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் களியாட்ட நிகழ்வு, கண்காட்சி மற்றும் சகாச நிகழ்வுகள் ஆகியன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

விமானப்படையின் 60 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு மார்ச் 2ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதிவரை இரத்மலானை விமானத்தளத்தில் விமானப் படையினரது கண்காட்சி நிகழ்வுகள் மற்றும் களியாட்ட நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் விமானப் படையினரது சாகசங்களும் மற்றும் சர்வதேச குழுக்களின் சாகசங்களும் இடம்பெறவுள் ளன. விமானம் மற்றும் தரைமூலமான தாக்குதல் முறைகளும் இதன்போது காட்சிப்படுத்தப்படவுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இலங்கையர்கோன் நினைவுப் போட்டி

(யாழ்.நிருபர்)

கொழும்பு தமிழ்ச்சங்கம் நடத்தும் “இலங்கையர்கோன் நினைவு”ச் சிறுகதைப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிறுகதைக்கான கருப்பொருளில எவ்வித கட்டுப்பாடுமில்லை. ஆனால் போட்டிக்கு அனுப்பப் படும் சிறுகதைகள் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டதாகவோ வேறு சிறுகதைகளின் தழுவல்களாகவோ இருக்கக் கூடாது. வெற்றிபெறும் சிறுகதைகளுக்கு முறையே 15,000, 10,000, 5,000 ரூபா பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டிக்கான சிறுகதைகளை 2011 மார்ச் 15 க்கு முன்னதாக அமரர் இலங்கையர்கோன் நினைவுச் சிறுகதைப் போட்டி “இலக்கியக் குழு” கொழும்பு தமிழ்ச்சங்கம் இல.7, 57 ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 6. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

## துள்ளுக்குடியிருப்பு வாகன விபத்தில் பாதசாரியான வயோதிபப் பெண் பலி

(மன்னார்)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியின் துள்ளுக்குடியிருப்பு கிராமப்பகுதியில் வீதியோரமாக நடந்துசென்றுகொண்டிருந்த பாதசாரியான வாயோதிபப் பெண்ணொருவர் மீது கூலர் ரக வாகனம் மோதியதில் குறித்த வயோதிபப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் துள்ளுக்குடியிருப்பு கிராமத்தினைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் அக்னேஸ் (வயது-73) எனும் வயோதிபப் பெண் என தலைமன்னார் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதை அடுத்து அவ்விடத்தில் திரண்ட மக்கள் குறித்த வாகன சாரதியினை கடுமையாகத் தாக்கியதோடு வாகனத்தினையும் சேதப்படுத்தியுள்ளனர். பின் சம்பவ இடத்திற்கு வந்த தலைமன்னார் பொலிஸார் வாகன சாரதியினை கைது செய்ததோடு சடலத்தினை மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். மேலதிக விசாரனைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## நாடாளுமன்ற உறுப்பினர் பதவி; பொன்சேகாவின் மனுஏற்பு

(கொழும்பு)

இலங்கை சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்ட அடிப்படை எதிர்ப்பு மனுவை நிராகரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இரத்து செய்யப்பட்டமைக்கு எதிராக முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனுவை தொடர்சசியாக விவாதிக்கத் தீர்மானித்துள்ளது.

இராணுவ நீதிமன்றம் அரசியல் அமைப்பின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீதிமன்றம் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால், சரத் பொன்சேகாவின் மனு தொடர்ந்தும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படக் கூடாதெனப் பணிக்குமாறு கூறி இலங்கையின் சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றத்தில் சமூகமளித்த அரச சட்டத்தரணி அண்மையில் கேட்டுக் கொண்டார்.

எனினும் இராணுவ நீதிமன்றம் அரசியல் அமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், தமது கட்சிக்காரரின் மனு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இரத்து செய்யப்பட்டமை தொடர்பிலானது என்பதால், அதனை தொடர்ந்தும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என சரத்பொன்சேகா சார்பில் நீதிமன்றத்தில் வாதாடிய சட்டத்தரணி தெரிவித்திருந்தார்.



இவ்விரு வாதங்களையும் கருத்தில் எடுத்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழு, சட்டமா அதிபர் தெரிவித்திருந்த எதிர்ப்பை நிராகரித்ததுடன், சரத் பொன்சேகாவின் மனுவை தொடர்ச்சியாக விசாரணை செய்ய ஏகமனதாகத் தீர்மானித்தது.

இதன்படி இம்மனுமீதான விசாரணை எதிர்வரும் 04, 05 மற்றும் 09ஆம் திகதிகளில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அதிர வைக்கும் எலிக்காய்ச்சல்; பன்னிரண்டு பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

குருநாகல் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் காரணமாக 12 பேர் உயிரிழந்துள்ளதுடன், 199 பேர் இக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்திட்டங்களில் வடமேல் மாகாண சுகாதார அமைச்சு, கமநல திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் இணைந்து செயற்படுவதுடன், இந்நோயினால் பாதிக்கபட்டவர்களுக்கான சிகிச்சைகளையும் வழங்கிவருவதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

- சீரற்ற காலநிலையால் -

## வவுனியாவில் 29 ஆயிரம் ஏக்கர் வயல்நிலம் அழிவடைந்துள்ளது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்ட மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையினால் சுமார் 29 ஆயிரம் ஏக்கர் வயல் நிலம் முற்றாக சேதமடைந்துள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன், 34 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளதாகவும் விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு சேதமடைந்துள்ள வயல்களிலுள்ள நெற்பயிர்கள் அறுவடை செய்யத் தயார் நிலையில் இருந்ததாகவும், அதனால் பாரியளவு நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதேவேளை, வவுனியா மாவட்டத்திலுள்ள வயல் நிலங்களில் 400இற்கு குறைவான வயல் நிலங்களே காப்புறுதி செய்யப்பட்டுள்ளமையினால் நட்டஈடு வழங்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், மன்னார் மாவட்டத்தில் 18 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு சேதமடைந்துள்ளதாக விவசாயத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.